என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். நீர் இனி மரித்தவர் அல்ல. நீர் வாழ்கிறீர். மேலும் நீர் ஒரு பிரதான ஆசாரியராக இங்கே இருக்கிறீர். நாங்கள் உம்மை நேசிக்கிறோம்,

நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம், நாங்கள் உம்மை ஏற்றுக்கொள்கிறோம், மேலும் நாங்கள் பிசாசைக் கண்டிக்கிறோம். இயேசுவின் நாமத்தினாலே நாங்கள் அவனைத் துரத்துகிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, அவருக்கே எல்லா துதியையும் மகிமையையும் செலுத்தி, எங்கள் சுகத்திற்காகவும் இரட்சிப்புக்காகவும் கர்த்தரை ஆராதிக்க நாங்கள் இப்போது சுதந்திரம் எடுத்துக்கொள்கிறோம்.

# காலம் சமீபமாயிருக்கிறது

## THE TIME IS AT HAND

56-0408E

ஞாயிற்றுக்கிழமை மாலை,
ஏப்ரல் 8, 1956

லேன் டெக் உயர்நிலைப்பள்ளி,
சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# காலம் சமீபமாயிருக்கிறது
(56-0408E)

நன்றி, சகோதரர் ஜோசப். ஜெபத்திற்காக நாம் ஒரு நிமிடம் நம் தலைகளைத் தாழ்த்துவோமா.

எங்கள் பரலோகப் பிதாவே, இந்த நாளின் முடிவிற்கும், இந்தக் கூட்டத்தின் முடிவிற்கும் நாங்கள் இப்போது வந்திருக்கையில், நீர் எங்களுக்குச் செய்த நன்மைகளுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் எங்களுக்குச் செய்யும் காரியங்களுக்கு நாங்கள் தகுதியற்றவர்கள். ஆனால் நன்றியுடனும் ஆராதனையுடனும் எங்கள் இருதயங்களை உமக்கு முன்பாகத் தாழ்த்துகிறோம். இன்றிரவு நீர் எங்கள் மீது புன்னகைத்து, "நன்றாகச்



உயர்த்துங்கள். அவர் இங்கே இருக்கிறார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார். இப்போது, நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? உங்கள் கைகளை உயர்த்துங்கள்.

பரலோகப் பிதாவே, ஆராதனையின் முடிவை நெருங்கி வருகிறோம், நீர் எல்லாவற்றையும் நன்றாகச் செய்த இடத்திற்கு வருகிறோம், நீர் எல்லாவற்றையும் நன்மையாகவே செய்திருக்கிறீர். நீர் நல்ல காரியங்களைத் தவிர வேறெதையும் செய்ய முடியாது, ஏனென்றால் நீர் தேவன்.

பரலோகப் பிதாவே, ஆயிரக்கணக்கான மக்கள் இங்கே அமர்ந்திருக்கும் இந்த மிகப்பெரிய கூட்டத்தில், நான் இப்போது கிட்டத்தட்ட மயங்கி விழும் நிலையில் இருக்கும்போது, ஒருவர்பின் ஒருவராக நாம் எப்படி ஜெபிக்க முடியும் என்று நான் உம்மை நோக்கி ஜெபிக்கிறேன்.

ஆனால் அன்பான பிதாவே, அவர்கள் உமது உயிர்த்தெழுதலின் வல்லமையைக் கண்டிருக் கிறார்கள், மேலும் நீர் இங்கே இருக்கிறீர்

ஒவ்வொருவரும் குணமாக்கப்படுவீர்கள். நீங்கள் ஏற்கனவே குணமாக்கப்பட்டுவிட்டீர்கள்.

70 ஜீன், உங்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் இந்த மனிதரை எனக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அது அந்த மனிதர் என்று நம்புகிறேன்... ஆம்... ஆனால் நீங்கள் வேறு ஒருவருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நபருக்கு ஒரு புற்றுநோய் இருக்கிறது. அது சரிதான். ஆம், அவர்கள் நிற்பதை நான் பார்த்தேன். பயப்பட வேண்டாம்; விசுவாசமாயிருங்கள்.

ஐயா, அங்கே பின்னால், அந்த ப்ரோஸ்டேட் பிரச்சனையிலிருந்து நீங்கள் விடுபட விரும்புகிறீர்களா? இயேசு இப்போது உங்களைக் குணமாக்கினார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவா சித்தால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அப்படியானால் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆமென்.

யாராவது குணமாக்கப்பட விரும்பினால், அவருக்கு நேராக உங்கள் கைகளை



செய்தாய்" என்று சொல்வீராக என நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஆண்டவரே, சுகமளிக்கும் ஆராதனை வரவிருக்கிறது. இத்தகைய மக்கள் கூட்டத்தில், வியாதியுடனும் தேவையுடனும் பலர் இங்கு இருக்கிறார்கள். பிதாவே, எப்படியாவது இன்றிரவு அவர்கள் ஒவ்வொருவரையும் நீர் சுகமாக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறோம். இந்த ஆராதனை முடியும் போது, நம் மத்தியில் பலவீனமானவர் ஒருவரும் மீதமிருக்கக் கூடாது.

2 உமது பெரிய கரங்களை விரித்து, அவர்கள் அனைவரையும் உமது மார்பில் அணைத்து, ஆண்டவரே, உமது அன்பை அவர்களுக்குக் காண்பிப்பீராக. இங்குள்ள பாவிகளே, தேவனே, நீர் ஒவ்வொருவரையும் இரட்சித்து, வழிதவறிப் போனவர்களை மீண்டும் மந்தைக்குள் அழைப்பீராக என்று நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் எங்கள் தலைகளைத் தாழ்த்தி உமக்குத் துதி செலுத்துவோம். ஏனெனில், உமது அன்பான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்

இதைக் கேட்கிறோம். ஆமென். நீங்கள் அமரலாம்.

3 இல்லினாய்ஸ் மாநிலத்தின் சிகாகோவில் உள்ள லேன் டெக் உயர்நிலைப் பள்ளியில் இருப்பதும், எனது அன்பான நண்பரான ஜோசப் போஸ், சகோதரர் ஐனார் எக்பெர்க், சகோதரர் ஹட்சின்ஸ் மற்றும் இந்த மற்ற சகோதரர்களுடனும், உங்கள் அனைவருடனும் இருப்பதும் எப்போதும் எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சியாகும். உங்கள் அன்பிற்காக உங்கள் அனைவருக்கும் நான் மிகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது வெறும்...

சில நிமிடங்களுக்கு முன்பு நான் நினைத்துக் கொண்டிருந்தேன், "எனக்கு பிறந்த நாள் பரிசு அளித்த அனைவரின் பெயர்களையும் ஒரு பட்டியலில் போட விரும்புகிறேன்." ஏன், நான்—நான் அப்படிப்பட்ட ஒரு காகிதத்தை வைத்திருக்க விரும்புகிறேன். நான் இதைச் சொல்ல விரும்புகிறேன், நிச்சயமாக, நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள்



அவர் என்னோடு நடக்கிறார், அவர் என்னோடு பேசுகிறார்,

வாழ்வின் இடுக்கமான வழியிலே,

அவர் வாழ்கிறார், அவர் வாழ்கிறார், இரட்சிப்பை அருளுவதற்காக.

அவர் வாழ்கிறார் என்பதை நான் எப்படி அறிவேன் என்று நீங்கள் கேட்கிறீர்கள்,

அவர் என் இருதயத்துக்குள் வாழ்கிறார்.

இப்போது, ஒரு நிமிடம். அம்மா, அவர் உங்களுக்காக அதைச் செய்கிறாரா? அப்படியானால் உங்கள் இருதய நோய் போய்விட்டது. அப்படியானால் மேடையை விட்டுச் செல்லுங்கள். கிறிஸ்தவர்களே, அவர் உங்களுக்காக அதைச் செய்கிறாரா? அவர் உங்கள் இருதயத்தில் வாழ்கிறாரா?

நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா? நீங்கள் உறுதியாக இருந்தால், உங்களுக்காக நான் ஜெபிக்கும்போது நமது கைகளை அவருக்கு நேராக உயர்த்துவோம், மேலும் நீங்கள்

"அவர் வாழ்கிறார்" என்ற ஒரு சரணத்தை மட்டும் பாடுவோம்.

சகோதரர் எக்பெர்க், அல்லது உங்களில் யாராவது ஒருவர்... இங்கே இருக்கும் சகோதரரே, நீங்கள் வந்து எங்களுக்கு ஒரு... "அவர் வாழ்கிறார், அவர் வாழ்கிறார், கிறிஸ்து இயேசு இன்று வாழ்கிறார்." என்பதை நீங்கள் இப்போது என்னோடு சேர்ந்து பாடுவீர்களா?

மேலும் அவர் இங்கே இருக்கிறார் என்பதற்காக, அவருக்கு நேராக உங்கள் கைகளை உயர்த்துங்கள். நீங்கள் அவரை ஆராதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். புரிகிறதா? அவர் ஆராதிக்கப்பட விரும்புகிறார். நான் என் இருதயத்தில் உணர்த்தப்படுகிறேன். இந்தப் பாடலின் மூலமாக நீங்கள் இப்போது அவரை ஆராதிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். சரி, சகோதரரே.

*அவர் வாழ்கிறார், அவர் வாழ்கிறார், கிறிஸ்து இயேசு இன்று வாழ்கிறார்.*



புரிந்துகொள்வீர்கள், மனப்பூர்வமாக, "தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக."

கொஞ்ச நேரத்திற்கு முன்பு நான் ஒரு சிறிய பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டிருந்தேன், எனது சிறிய ஜோசப்பிற்கான ஒரு ஜோடி சிறிய உடைகள் (rompers) கீழே விழுந்தன. மேலும்... நான்... சரி, நான்—நான் வெறும்... என் இதயத்தில் ஏதோ ஒன்று... நீங்கள் வெளிப் படுத்த நினைப்பதை வெளிப்படுத்த முடியாத ஒரு நிலைக்கு நீங்கள் எப்போதாவது வந்திருக்கிறீர்களா? புரிகிறதா? நீங்கள் செய்யத் தெரிந்த ஒரே காரியம், "தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று சொல்வதுதான். அதைத்தான் என்னால் சொல்ல முடியும். பல இலட்சம் நன்றிகள்.

4 இப்போது, இன்றிரவு இந்தக் கூட்டத்தின் நிறைவு... சிகாகோ மக்களுடன் இருப்பதில் நான் எப்போதும் மகிழ்ச்சியடைகிறேன். சிகாகோ மக்கள் அனைவரும் இன்றிரவு லேன் டெக்கில் இருக்கும் இவர்களைப் போலவே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் அறிந்த அதே இயேசுவை அவர்கள்

அறிந்துகொண்டால், அவர்கள் நிச்சயமாக அப்படி இருப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர்கள்—அங்கே இருக்காது... சிகாகோவில் உள்ள அனைவரும் இன்றிரவு லேன் டெக்கில் உள்ள மக்களைப் போல இருந்தால், காவலர்கள் அனைவரையும் நாம் விடுமுறைக்கு அனுப்பிவிடலாம் என்று நான் நம்புகிறேன். பார்க்கிறீர்களா? 'பூட்டு... சிறைச்சாலைகள் அனைத்தையும் திறந்துவிட்டு, "சரி, இனிமேல் இவர்களிடம் முட்டாள்தனமாக நடந்துகொள்ளத் தேவையில்லை. அவற்றை ஒழித்துக்கட்டுங்கள்" என்று சொல்லுங்கள். நமக்கு கிடைக்கும்... இங்கே உள்ள இந்தப் பள்ளத்தாக்கில் அனைவருக்கும் சமாதானம் இருக்கும்.

ஒரு நாள் அது அப்படித்தான் இருக்கும், நண்பரே. தமது ஊழியர்களாக மாறியவர்களை ஏற்றுக்கொள்ள இயேசு இரண்டாம் முறை வரும் அந்த மாபெரும் நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். அந்த நாளில் அந்த எண்ணிக்கையில் நானும் சேர்க்கப்பட விரும்புகிறேன். அவர் என்னை நேசித்து, என் பாவங்களை மன்னித்து, மற்றவர்களை



இங்கிருந்து சென்று அவர் கேட்ட எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வாராக. ஆண்டவரே, அவர் தனது மென்மையான விசுவாசத்தில் ஒரு சிறுமிதான். அதற்குப் பெரிய பலன் கிடைக்கட்டும். ஏனெனில் அவருடைய நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம். ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி. சந்தோஷத்தோடும் விசுவாசத்தோடும் செல்லுங்கள்.

69 இப்போது, நான் உங்களிடம் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிற உங்களில் ஒவ்வொருவரும்... இப்போது நீங்கள் தொந்தரவு அடைவதற்கு முன்பாக, நான் உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

ஒரு சிறு சந்தேகத்தின் நிழல்கூட இல்லாமல் நீங்கள் இப்போது விசுவாசிக்கிறீர்களா? எல்லா சந்தேகங்களும் நீங்கிவிட்டதா? இப்போது, அவர் உயிருடன் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

அமெரிக்கர் அல்ல; நீங்கள் ஒரு கனடியர். நீங்கள் கனடாவிலிருந்து வருகிறீர்கள். மேலும் நீங்கள் ஒரு பச்சை நிற காரில் வருவதை நான் காண்கிறேன், அல்லது நான் நம்புகிறேன், அது ஒரு மெர்குரி என்று, அது அப்படித்தான் என்று நான் நம்புகிறேன். மேலும் நீங்கள்—குடிக்கு அடிமையான ஒரு மனிதருக்காக நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அது உங்கள் தந்தை. அது சரிதான். அதன்பிறகு கண்ணாடி அணிவது போன்ற ஒரு சிறிய நண்பர் உங்களுக்கு இருக்கிறார், மேலும் அந்த நண்பருக்காக நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மை, சகோதரி. **கர்த்தர் உரைக்கிறதாவது**.

நீங்கள் இப்போது விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் எதற்காக வந்தீர்களோ அதைப் பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசிக் கிறீர்களா? வாருங்கள்.

அன்பான தேவனே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் இந்தக் குழந்தையை ஆசீர்வதிக்கிறேன், அவர் இன்றிரவு



அவரிடம் கொண்டுவர உதவும் ஒரு சிறிய வழியை எனக்குக் கொடுத்திருப்பதால் நான் அதை மதிக்கிறேன்...

5 இன்று மதியம் நான்... ஒருவேளை நான்... ஒருவேளை நான் அதிகமாக மதிப்பிட்டிருக்கலாம். ஆனால் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஓ, அதைப் பார்ப்பது என் இதயத்தை மெய்சிலிர்க்க வைக்கிறது, அது எனக்கு மிகவும் நல்ல உணர்வைத் தருகிறது. தேவனுடைய வார்த்தையின்படி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அவர்கள் கைகளை உயர்த்திய போது, அவர்கள் ஒவ்வொருவரையும் இன்று இயேசு தமது ராஜ்யத்திற்குள் கொண்டுவந்தார் என்பதை நான் ஆழ்ந்த உண்மையோடு நம்புகிறேன்.

அவர் தமது வார்த்தையைத் திரும்பப் பெற முடியாது. அவர் அதைச் செய்வதாக வாக்குறுதி அளித்தார். அவர் சொன்னார், "என் பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் எவனும் என்னிடத்தில் வரமாட்டான்." பிதா இங்கு

அவர்களை இயேசுவிடம் இழுத்துக் கொண்டிருந்தார் என்றால், அவர்கள் வந்து, "நான் இப்போது அவரை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்னால், வேறு ஒன்றும் மீதமில்லை, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்; அவ்வளவுதான்.

6 இப்போது, அது உங்களை—விசுவாசிகளுக்குள் கொண்டுவருகிறது. இப்போது ஒரு கிறிஸ்தவ விசுவாசியாக அது உங்களையும் உள்ளடக்குகிறது. இப்போது, நான் இதைச் செய்வேன் (உங்களுக்கு அறிவுரை கூறுவதற்காக); நான் இதோடு நிறுத்த மாட்டேன். பரிசுத்த ஆவியானவரால் சபைக்குள், விசுவாசிகளின் சரீரத்திற்குள் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவருடைய ராஜ்யத்தில் என்னையும் அவருடன் ஒரு உடன் வேலையாளாக மாற்ற எனக்குப் பரிசுத்த ஆவியானவரைத் தரும்படி நான் தேவனிடம் கேட்பேன்.

சில நல்ல சபைகளில் இணையுங்கள். சபைக்கே செல்லாமல் இருக்காதீர்கள்; ஏதாவது ஒரு சபைக்குச் சென்று அந்த சபையின்



அறிமுகமில்லாதவர்களா? எனக்கு உங்களைத் தெரியாது.

இப்போது, இவள் ஒரு வெள்ளைக்கார சிறுமி. அவர் மற்றவர்களுக்குச் செய்வதைப் போல, அவர் எதற்காக அங்கே நிற்கிறார் என்பதையும், அவருடைய வியாதி என்னவென்பதையும், அல்லது எதுவாக இருந்தாலும் அதை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தினால், உங்களில் எத்தனை வெள்ளைக்காரர்கள், இயேசுவை உங்கள் பரிகாரியாக ஏற்றுக்கொண்டு அறிந்து கொள்வீர்கள்? அதைச் செய்யுங்கள்.

68 சரி. கர்த்தர் அதை அருளுவாராக. இப்போது, சகோதரி, என்னால் முடியும்... இப்போது, அது உங்களை காயப்படுத்தாது. நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று என்னால் இப்போது ஒரு காரியத்தைச் சொல்ல முடியும். மேலும் நீங்கள் சமீபத்தில்தான் ஒரு கிறிஸ்தவராக ஆனீர்கள், இப்போதுதான் கிறிஸ்தவராக மாறியிருக்கிறீர்கள்.

ஆனால் நீங்கள்—நீங்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்ல. நீங்கள்—நீங்கள் ஒரு

பாருங்கள், நீங்கள் அதை விசுவாசித்தால், நீங்கள் அதை விசுவாசிப்பதைப் போலவே செயல்பட வேண்டும்.

காண்கிறீர்களா? நீங்கள் அதை மெய்யாகவே விசுவாசித்தால், நீங்கள் விசுவாசிப்பது போலவே செயல்படுவீர்கள். உங்களுக்கு எல்லாம் சரியாகிவிடும். கவலைப்படாதீர்கள். காண்கிறீர்களா? கவலைப் படாதீர்கள்; உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

இப்போது, நீங்களனைவரும் முழுவதுமாக விசுவாசிக்கிறீர்களா—கறுப்பின மக்களாகிய நீங்கள் அனைவரும் இயேசு உங்களைக் குணமாக்குகிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? ஆமென். அது நல்லது.

இப்போது, இங்கே ஒரு சிறுமி இருக்கிறாள். எனக்கு இந்தச் சிறுமியைத் தெரியாது. என் வாழ்க்கையில் நான் இவளைப் பார்த்ததே இல்லை. எனக்குத் தெரிந்தவரை, நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள். அது சரிதானா, அம்மா? நாம் ஒருவருக்கொருவர்



ஐக்கியத்திற்கு உதவுங்கள். இந்தக் கூட்டங்களில் இரட்சிக்கப்பட்ட உங்கள் அனைவருக்குமானது இது.

இப்போது, சகோதரர் ஓரல் ராபர்ட்ஸ் என்று நினைக்கிறேன்... அவருடைய கூட்டத்தை நான் அறிவிக்கப் போகிறேன், ஆனால் அவரும் இன்றிரவு முடித்துக்கொள்கிறார் என்று நினைக்கிறேன். சகோதரர் ஃப்ரீமேன் இன்றிரவு முடிக்கப் போகிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. [ஒரு சகோதரர் சொல்கிறார், "அவர் இன்றிரவு தொடங்குகிறார்."] அவர் இன்றிரவு தொடங்குகிறார்; என்னை மன்னியுங்கள். நான்—இந்தச் சகோதரர்களின் பயணத் திட்டங்கள் எனக்குக் கிடைப்பதில்லை. நான்... என்னிடம் இருப்பது வெறும்... எனக்கென்று சொந்தமாக ஒரு பத்திரிகை இல்லை. சகோதரர் ஜோசப், எனது பயணத் திட்டங்கள் மற்றும் கட்டுரைகள் அச்சிடப்படுவதற்குத் தமது பத்திரிகையைப் பயன்படுத்த என்னை அனுமதிக்கும் அளவுக்கு மிகவும் நல்லவர்.

7 என் மகன், திரு. வுட், மற்றும் அவர்கள் சிலர், சில நிமிடங்களுக்கு முன்பு நாங்கள் கதவுக்குள் வந்தபோது, நமது கர்த்தராகிய இயேசுவின் சுகமளிக்கும் வல்லமையைக் குறித்த சில அற்புதமான சாட்சிகள் அவர்களுக்கு இருந்ததாக என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இது ஒவ்வொரு முயற்சிக்கும் தகுதியானது என்று நான் நினைக்கிறேன். ஆத்துமாக்கள் கர்த்தராகிய இயேசுவிடம் வந்தார்கள் என்றும் மக்கள் சுகமடைந்தார்கள் என்றும் நான் அவர்களிடம் சொல்லும்போது என் மனைவியும், குழந்தைகளும் மற்றும் அவர்களும் புன்னகைப்பார்கள்.

கஷ்டப்படுவது என்றால் என்னவென்று எங்களுக்குத் தெரியும். எங்கள் சொந்தக் குடும்பத்திலேயே எங்களுக்கு வியாதி இருக்கிறது. சிறு குழந்தைகளில் ஒருவருக்கு உடம்பு சரியில்லாமல் போகும்போதும் மற்ற காரியங்களின் போதும், நானும் என் மனைவியும் அவர்களை அறைக்குள் அழைத்துச் சென்று, படுக்கையில் படுக்க வைத்து, ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொண்டு



மரித்தோரிலிருந்து இயேசுவை எழுப்பி, அவருடனும், அவருடைய வார்த்தையுடனும் ஐக்கியம் கொள்வதற்கும், இன்றிரவு அவருடைய ஆவியின் வெளிப்பாட்டைக் காண்பதற்கும் எங்களுக்குச் சிலாக்கியத்தை அளித்த அன்பான தேவனே. மேலும் ஆண்டவரே, அந்த நாளில் கிணற்றருகே—அந்த—அந்த சமாரியப் பெண்ணுக்கு நீர் அங்கே செய்ததுபோலவே, இந்த சகோதரிக்கும், இப்போது அவரைப்போன்று அருகில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் நீர் அவ்வாறே செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

ஆண்டவரே, அவர்கள் ஒவ்வொருவரையும் நீர் இப்போதே குணமாக்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, அவர்களின் சரீரங்களிலுள்ள வியாதியை நான் கண்டிக்கிறேன். ஆமென்.

67 நீங்கள் எப்படி சந்தேகப்பட முடியும்? உங்களால் முடியாது, இல்லையா? இப்போது, நீங்கள் சென்று, சந்தோஷமாக இருங்கள். புரிகிறதா? நீங்கள் சந்தோஷமாக மட்டுமே இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

காரியங்களுக்கும் செல்ல விரும்பாதது போல் ஆக்குகிறது.

அது—அது உங்களைப் பயமுறுத்துகிறது. நான் ஒரு இருண்ட நிழலைக் காண்கிறேன்... நீங்கள் வீட்டிலிருந்து கிளம்பி, திரும்பி மீண்டும் பின்னால் சென்றுவிட்டீர்கள். புரிகிறதா? அது ஒரு பயமாக இருந்தது. பின்பு உங்கள் உடலில் பயங்கரமான வலி இருக்கிறது, அது உங்கள் நெஞ்சுப் பகுதிக்கு மேலே இருக்கிறது. அது சரிதான். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள்; அதுதான் உண்மை என்று உங்களுக்குத் தெரியும்.

அதன் பின்பு உங்களுக்கு ஒரு—ஒரு—ஒரு கட்டி, அல்லது ஒரு முடிச்சு, அல்லது ஒரு சதை வளர்ச்சி இருக்கிறது. அந்த வளர்ச்சி உங்கள் வலது கையில் மூடியிருக்கிறது. அது சரிதானே? நீங்கள் இப்போது அவரை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள்—உங்கள் சுகத்திற்காக இப்போது நீங்கள் அவரை ஏற்றுக்கொள்வீர்களா? என் கறுப்பின நண்பர்களே, மற்ற மீதியான அனைவரும் அதே நேரத்தில் அவரை ஏற்றுக்கொள்வீர்களா? சரி. இங்கே வாருங்கள், சகோதரி.



பிதாவின் முன்பாக மண்டியிட்டு, "பிதாவே, இப்போது நீர் எங்களுக்கு இந்தக் குழந்தைகளைக் கொடுத்தீர், நாங்கள்—நாங்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறோம்; எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சாத்தான் அவர்கள் மேல் வைத்த இந்த வியாதியிலிருந்து அவர்களைக் குணப்படுத்தும் அளவுக்கு நீர் தயவாயிருப்பீரா என்று உம்மிடம் கேட்கிறோம்" என்று சொல்வோம். அவர் இதுவரை எங்களைக் கைவிடவில்லை. அவர் கைவிடுவார் என்றும் நான் நம்பவில்லை. இதற்காக நாங்கள் அவரை நேசிக்கிறோம்.

அதன் பிறகு, அவர் எங்களுக்கு உதவுவதால், அவரைப் பற்றி உங்களிடம் சொல்ல நாங்கள் விரும்புகிறோம். ஒருவேளை நீங்கள் அதை அறியாவிட்டால், அவர் உங்களுக்கு உதவ விரும்புகிறார். அவருடைய—அவருடைய அன்பு அனைவருக்கும் இலவசமானது. இன்றிரவு ஒவ்வொரு துன்பப்படும் நபருக்கும் கர்த்தர் அருள்புரிவாராக...

நான் இங்கு இந்த ஒலிவாங்கியின் முன் நிற்கும்போதெல்லாம், நான் நின்று பார்த்து மக்கள் அங்கே அமர்ந்திருப்பதைக் காணும் போது, "நான் மட்டும் முடிந்தால்..." என்று அவர்கள் கெஞ்சுவதை நான் பார்க்கிறேன். புரிகிறதா? நான்... ஜெபிக்க நான் சிலரை மட்டும் அழைத்தது போல் தெரிகிறது. நான் நினைக்கிறேன், "சரி, இதில் என்ன இருக்கிறது? இது எதைப் பற்றியது? நான் மக்களுக்கு உதவ முயற்சிக்கிறேனா?"

8 அந்தப் பழைய வேகமான வரிசை—நாங்கள் அவர்கள் மேல் கைகளை வைக்கப் பயன்படுத்தியது, அது சிறப்பாக வேலை செய்ததா என்று நான் அடிக்கடி ஆச்சரியப் பட்டிருக்கிறேன். நான் மக்களுக்கு ஒரு காரியத்தைப் புரிய வைக்க முயற்சிக்கிறேன்: அதாவது, நானோ அல்லது வேறு எந்த மனிதனோ தொடுவது என்பது அவ்வளவு பெரிய விஷயமல்ல. அது என்னவென்றால், உங்கள் விசுவாசம் அவரைத் தொடுவதுதான். அதுதான் அங்கே இருக்கிறது.



அது சரிதான். நிச்சயமாக. மேலும் உங்களுடைய பெருங்குடல் கீழே இறங்கியிருக்கிறது, இல்லையா, அம்மா? அது சரி என்றால் உங்கள் கையை உயர்த்துங்கள். இதோ நீங்கள் இருக்கிறீர்கள். காண்கிறீர்களா? கவலைப்படாதீர்கள்; அது முடிந்துவிட்டது.

விசுவாசம் மட்டும் வையுங்கள். அது இங்கு மேடையில் அசைவாடுவதைவிட சபையி னருக்குள் அதிகமாக அசைவாடுவது போல் தெரிகிறது. நண்பர்களே, உங்கள் விசுவாசமே இவைகளைச் செய்கிறது. தேவனை விசுவாசியுங்கள்.

66 இப்போது, உங்களுக்கு, அம்மா. நீங்கள் மிகவும் பதட்டமாக இருக்கிறீர்கள் (அது சரிதான்.), மிகவும் பதட்டமாக. உங்களுக்கு அந்த நரம்புத்தளர்ச்சி நடுக்கம் வந்து, அது ஒருவிதமாக விட்டுவிட்டு உங்கள்மேல் வருகிறது. இது கொஞ்ச காலமாகவே உங்களைத் தொந்தரவு செய்கிறது, இல்லையா? சில நேரங்களில் அது உங்களைப் பயமுறுத் துகிறது, நீங்கள் சில இடங்களுக்கும்

காண முடியாது, ஏனென்றால்... தொலைக் காட்சியின் படங்கள் இதன் வழியே வந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் அவைகளைக் கூடப் பார்ப்பதில்லை. அவர் அந்தப் பரிமாணத்திற்கும் அப்பாற்பட்டவர். ஆனால் அதேபோல் அவரும் இங்கே இருக்கிறார். காண்கிறீர்களா?

இப்போது, இந்த வழியே பாருங்கள், அம்மா. உங்கள் ஒவ்வொருவரும் இப்போது உங்கள் சுகத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன், நீங்கள் சம்மதித்தால், சரியாக அந்த வேளையில்... இப்போது, எனக்கு முன்பாக இங்கே ஒரு பெண்மணி தோன்றினார். ஒரு நிமிடம்;

அவர் எங்கேயோ ஜெபித்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய கிருபையால் நான் அவரைக் கண்டுபிடிப்பேன். அப்போது அவர் அவரைத் தொட்டார். அது சரிதான். அது என்னைப் பலவீனப்படுத்தியது. இதோ அவர் இங்கே அமர்ந்திருக்கிறார், சரியாக இங்கே, சரியாக இங்கே. பெருங்குடல் பிரச்சனை.



நான், ஒரு உண்மையான இருதயத்துடன், நான்—நான் உண்மையிலேயே அதையே கருதுகிறேன், உங்களுக்கு உதவி கிடைப்பதை நான் காண விரும்புகிறேன். தேவன்—தேவன் என் இருதயத்தை அறிவார். எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் செய்கிறேன். அடுத்த இரண்டு வினாடிகளில் இந்த மேடையிலிருந்து கீழே விழுந்து சவக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட நான் தயாராகிக்கொண்டிருந்தாலும், தேவனுடைய குழந்தைகளுக்கு உதவ என் முழு இருதயத்தோடும் நான் முயற்சிப்பேன். ஏனென்றால் நான் தேவனை நேசிக்கிறேன், நான் அவருடைய குழந்தைகளை நேசிக்கிறேன். அவருடைய குழந்தைகளை நேசிக்காமல் என்னால் தேவனை நேசிக்க முடியாது. நான் குழந்தைகளை நேசித்தால், ஒரு தந்தை இருப்பதைப் போலவே, சுமைகளைச் சற்றே இலகுவாக்கவும், உங்களுக்கு வாழ்க்கையைச் சற்றே இனிமையாக்கவும், உதவிக்காக அவர்கள் அவர் மேல் விசுவாசம் வைப்பதற்கு எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் முயற்சிக்கிறேன். ஏனென்றால் அது குறுகியது.

எப்படியிருந்தாலும் நாம் இங்கு வெகு காலம் தங்கியிருக்கப் போவதில்லை.

9 அது என்னவென்றால், சாத்தான் நம்மைக் கட்டிப்போட்டிருக்கும் துயரமான நிலையில் நாம் அதைத் தாங்கிக்கொள்ள வேண்டும். இந்த காரியங்களில் இருந்து உங்களை விடுவிப்பதற்காகவே இயேசு வந்தார் என்ற நற்செய்தியை, செய்தியைச் சொல்ல நான் விரும்புகிறேன். அவர் பலருக்கு அதைச் செய்வதைப் பார்க்கும்போது, நான்—சரி, தேவன் பட்சபாதம் உள்ளவர் என்பதை என்னால் நம்ப முடியாது. விசுவாசிக்கும் அனைவருக்கும் அவர் அதைச் செய்வார் என்று நான் நம்புகிறேன். அதனால்தான் நாம் இங்கு இருக்கிறோம்.

எனக்காக ஜெபியுங்கள். இன்றிரவு நாங்கள் வீட்டிற்கு வாகனத்தில் செல்கிறோம், அநேகமாக அதிகாலை நான்கு, ஐந்து மணி அளவில் வீட்டிற்குச் சென்றடைவோம். நான் எட்டு மணிக்கு லூயிஸ்வில்லியில் இருக்க வேண்டும், அதன்பிறகு, ஓ, நாளை மிகவும் பரபரப்பான நாள், மீண்டும் நாளை இரவு பயணப் பொதிகளைக் கட்டிக்கொண்டு தென்



முதலாவது, நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்:

எனக்கு உங்களைத் தெரியாது, இல்லையா, அம்மா? நான் உங்களை ஒருபோதும் பார்த்ததில்லை, உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஒரு சிறு காரியமும் தெரியாது. இந்த அறையிலிருக்கும் ஒவ்வொரு கறுப்பின சகோதர சகோதரிகளே, இதோ உங்களுடைய சகோதரிகளில் ஒருவர் இங்கே நிற்கிறார், உங்கள் சகோதரி மட்டுமல்ல, எங்கள் சகோதரியும்கூட,

ஆனால் உங்களைப் போன்றே அதே நிறத்தைச் சேர்ந்தவர் என்று நான் கூறுகிறேன். மேலும் நினைவில் கொள்ளுங்கள், இயேசுவுக்காக சிலுவையைச் சுமக்க உதவியது யார்? அவர் புரிந்துகொள்கிறார். இப்போது, சீமோன் சிலுவையைச் சுமக்க உதவிய, கொல்கொதாவுக்குச் சென்ற அதே இயேசுவே, அவர் இன்றிரவு இங்கே உயிருடன் இருக்கிறார்.

65 பாருங்கள், அவர் இன்னொரு உலகத்தில் இருக்கிறார். நீங்கள் அவரை உங்கள் கண்களால்

நாமத்தில் அது அவர்கள் ஒவ்வொரு வரிடமிருந்தும் அகற்றப்பட வேண்டும் என்றும், அவர்கள் குணமாக்கப்பட்டு, உம்மை மகிமைப் படுத்த வேண்டும் என்றும் ஜெபிக்கிறோம். ஆமென்.

சந்தேகப்பட வேண்டாம்; விசுவாசியுங்கள். இந்த வழியே பார்த்து விசுவாசியுங்கள்; நான் உங்களைச் செய்யக் கேட்பது அவ்வளவுதான்.

64 மேலும் இப்போது, அம்மா, நாம்... ஐயா, இயேசு கிறிஸ்துவால் உங்களை குணமாக்க முடியும். தேவன் அந்த காசநோயை உங்களை விட்டு அகற்றுவார் என்று நீங்கள் விசுவாசித்தால், அது நீங்கிவிடும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரி. நீங்கள் விசுவாசித்த படியே, அது உங்களுக்கு நடப்பதாக. ஆமென்.

இப்போது, அம்மா, நீங்கள் விசுவாசித்தால் மட்டுமே, தேவன் உங்களுக்கு உதவுவார் என்று நான் நம்புகிறேன். நீங்கள் இப்போது என்னோடு சேர்ந்து விசுவாசிப்பீர்களா? தேவன் செய்வாரானால், இங்குள்ள ஒவ்வொரு கறுப்பின நபரும் விசுவாசிப்பார்களா... இந்த பெண்மணி,



கரோலினாவின் கொலம்பியாவிற்குப் புறப்பட வேண்டும். பின்னர் ஸ்பிண்டேலுக்குச் சென்று, சார்லோட்டிற்கு ஏறி, அங்கிருந்து அலாஸ்காவின் அங்கரேஜுக்கும், மீண்டும் இந்தியானாவின் இண்டியானாபோலிஸுக்கும், பின்னர் அடுத்த ஆராதனைக்காக ஒருவேளை மினியாபோலிஸுக்கும் செல்ல வேண்டும். ஆகையால், எனக்காக நீங்கள் ஜெபிப்பீர்கள், அல்லவா?

10 இந்த ஆண்டின் ஜூன் மாதத்திற்குப் பிறகு—வெளிநாடுகளுக்குச் செல்வது குறித்து நான் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் கர்த்தர் என்னை அழைத்தால், நான் எங்கு இருந்தாலும் போர் கடுமையாக மாறும்போது... எனக்கு நிறைய எதிர்ப்புகள் உள்ளன. உங்களிடம் என்னால் சொல்ல முடியாத காரியங்கள் என்னிடம் உள்ளன. நான் யாரிடமும் சொல்வதில்லை. நான் அதை எனக்குள்ளேயே வைத்துக்கொள்கிறேன். நான் சில சமயங்களில், வெறுமனே உடைந்த இருதயத்துடன் இங்கு நின்று, பார்வை யாளர்களைப் பார்க்கும்போது, "ஓ தேவனே, அந்த அன்பான நபர், அவர்கள் எப்படித் தங்கள் இருதயத்தில் அதை நினைக்க முடியும்?" என்று

நான் நினைக்கும் நபர்களைப் பார்க்கிறேன். புரிகிறதா?

அது என்னை மோசமாக உணர வைக்கிறது, ஆனால் எப்படியும் நான் தொடர்ந்து செல்கிறேன். எனவே நான் இருக்கும்போது... எனக்காக நீங்கள் ஜெபிப்பீர்கள், அல்லவா? நான் உங்களுக்காக ஜெபிப்பேன். நான் எப்போதாவது உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடிந்தால், ஏன், எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். உங்களுக்கு ஒரு ஜெபத் துணி தேவைப்பட்டால், அல்லது உங்களுடன் சேர்ந்து நான் ஜெபிப்பதற்காக என்னை அழைத்தால், நான் அதைச் செய்வேன். ஒருபோதும் மிகவும் தூக்கமாகவோ அல்லது மிகவும் சோர்வாகவோ இருக்கமாட்டேன், ஆனால் உங்களுக்கு உதவ என்னால் முடிந்ததைச் சிறப்பாகச் செய்வேன்.

நாம் மீண்டும் சந்திப்பதற்கு முன்பு நீங்கள் கடந்து சென்றால், ஒரு நாள் அங்கே உங்களைச் சந்திக்க உங்களுடன் ஒரு சந்திப்பு நேரத்தை நான் விரும்புகிறேன். தேவனுடைய கிருபை யால், நான் எனது பாதையில் செல்கிறேன். நான்... இன்றிரவு நீங்கள் இல்லையென்றால்,



திருமதி., உங்கள் பெயர் என்னவென்று எனக்கு மறந்துவிட்டது, ஆனால் எனக்கு உங்களைத் தெரியும். அது சரிதான். அம்மா, நீங்கள் தேவனைத் தொடர்பு கொண்டுள்ளீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் புற்று நோயைக் குறித்து பயப்படுகிறீர்கள். அது சரிதான்.

63 உங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் பெண்மணிக்கு மணிக்கட்டில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. உங்களுக்குத் தெரியும், அவருடைய... தேவனுடைய தூதனானவர்... சிவப்பு நிற தொப்பி அணிந்து, சரியாக பின்னால் அமர்ந்திருக்கும் பெண்மணிக்கு மூட்டுவலி இருக்கிறது. நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா. அது சரிதானே, அம்மா? அங்கே காண்கிறீர்களா? நீங்கள் காண்கிறீர்களா?

நீங்கள் அனைவரும் ஒருவர் மேல் ஒருவர் உங்கள் கைகளை வையுங்கள், அங்கே, ஒவ்வொருவரும்... ஓ தேவனே, எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இப்போது இந்த பொல்லாப்பை அதட்டுகிறோம், கிறிஸ்துவின்

மனிதர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

அம்மா, இது செய்யப்படும் என்று நீங்கள் இதில் என்னுடன் உடன்படுவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அப்படியானால் நீங்கள் கேட்டதை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். செல்லுங்கள், தேவனுடைய சமாதானம் உங்களுடன் இருப்பாதாக.

எப்படி இருக்கிறீர்கள், அம்மா. உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? எனக்கு உங்களுக்கு உதவ முடியவில்லை... இப்போது, இங்கே ஒரு பெண்மணி தோன்றினார், நான்... அது ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி. எல்லோரும் சற்று... அவர் இங்கேயே அமர்ந்திருக்கிறார், ஒரு சாம்பல் நிற கோட் அணிந்திருக்கிறார்.

உங்கள் தொண்டையில் ஏதோ இருக்கிறது, அதைப்பற்றி நீங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள், இல்லையா, சகோதரி? ஓ, நான்... அது—அது எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி; அது—அது எனக்குத் தெரியாது.



நீங்கள் இயேசு கிறிஸ்துவில் உங்கள் தேர்வைச் செய்யும் உங்கள் தீர்மான நேரமாக இந்த இரவை மாற்றுவீர்களாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

11 இப்போது, நற்செய்தியை வாசிப்பதில். சில நிமிடங்களுக்கு முன்பு நான் போதகர் போஸிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்... நான்... போதகர் போஸுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் நான் மீண்டும் வெளிப் படையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். நான்... நாம் அனைவரும், நாம்... நமக்கு ஏற்றத் தாழ்வுகள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள், மேலும் நாம் அதை அழைப்பது போல, சில நேரங்களில் நமக்கு உள்ளும் புறமுமான நிலைகள் இருக்கும். ஆனால் சகோதரர் ஜோசப் எல்லா வகையான கால நிலைகளிலும் என் நண்பராக நிரூபிக்கப் பட்டிருக்கிறார். நான்—எல்லா கால நிலை களிலும் இருக்கும் அந்த நண்பரை நான் நேசிக்கிறேன், நீங்கள் நேசிக்கவில்லையா? நீங்கள் சரியாக இருந்தாலும் அல்லது தவறாக இருந்தாலும்... நான் சகோதரர் ஜோசப்பை மதிக்கிறேன். நான்—நான்...

நான் அதைச் சொல்லப் போகிறேன் என்று அவருக்குத் தெரியாது, நான் அதைச் சொல்லப் போயிருந்தால் அநேகமாக என்னை நிறுத்தியிருப்பார். ஆனால் அவர் சென்ற பிறகு ஒரு முழு மலர்வளையத்தை அளிப்பதை விட, அவருக்கு ஒரு—ஒரு சிறிய ரோஜா மொட்டை இப்போது கொடுக்கவே நான் விரும்புகிறேன். சகோதரர் ஜோசப் போஸ் அவர்களை நான் மதிக்கிறேன்.

12 அவளுடைய உறவினரான திருமதி. மிச்சென் ரோபி, அந்த ஏழை சிறு குழந்தைகளுக்காக ஜெர்மனியில் அவர் செய்து கொண்டிருக்கும் மாபெரும் பணி… சில நாட்களுக்கு முன்பு ஷ்ரீவ்போர்ட்டில் நான் அவரை அங்கே சந்தித்தபோது, அவர் வெளியே சென்று நிதியுதவி கோரியும், ஜெர்மனியில் உள்ள அந்த ஏழைச் சிறு அகதிகளுக்கு ஆதரவளிக்கத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துகொண்டிருந்தார், அவர் எனக்குச் சில காகிதங்களைக் கொடுத்தார். நான் அவற்றைத் தற்செயலாக என் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன், நீங்கள் வீட்டிற்குச் செல்லும்போது உங்கள் சிறு குழந்தைகள் எப்படி இருப்பார்கள்



நமது தோலின் நிறங்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

ஆனால் அம்மா, நீங்கள் என்னை விட்டு விலகிச் செல்வதை நான் காண்கிறேன். ஆம், நீங்கள் வேறு ஒருவருக்காக ஜெபிக்கிறீர்கள்: உங்கள் கணவருக்காக. அது சரிதான். அவர் இங்கே இல்லை. அவர் ஒரு… ஓ, அவர் ஒரு போதைக்கு அடிமையானவர். மேலும் நீங்கள்… நான் அவரைப் பார்க்கிறேன்; அது பயங்கரமானது… நான் இதற்குமேல் சொல்ல மாட்டேன், ஆனால் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். வாருங்கள், இந்த கைக்குட்டையை என்னிடம் கொடுங்கள்.

62 ஓ இயேசுவே, தேவனுடைய குமாரனே, இரக்கம் அருளப்பட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், ஆண்டவரே, இப்போது இங்கே நிற்கும் இந்த ஏழை ஆத்துமாவை ஆசீர்வதியுங்கள். மேலும் காத்திருக்கும் அந்த நபரையும் ஆசீர்வதியுங்கள். பொல்லாப்பு அவரை விட்டு நீங்க வேண்டும் என்றும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அந்த

தேவன் அந்த ஏழை ஆத்துமாவை ஆசீர்வதிப்பாராக. அவருடைய நித்திய ஆசீர்வாதங்கள் அவர்மீது தங்குவதாக.

61 எதைக் குறித்து நீங்கள் பயப்படுகிறீர்கள், சகோதரி? கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறீர்கள், இல்லையா? வரிசையில் அங்கு அமர்ந்திருக்கும் சிறிய பெண்மணி, நீங்கள் சும்மா... நான் அப்படி உணரமாட்டேன். இல்லை. பய பக்தியோடு இருங்கள். புரிகிறதா? ஒன்றுமில்லை... அந்த காரியம் உங்கள் மேல் வரலாம், பொல்லாப்பு. சிறிய பெண்மணியே, உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

வாருங்கள். அம்மா, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது. அவருக்கு உங்களைத் தெரியும்; எனக்குத் தெரியாது. இயேசுவும் சமாரியப் பெண்ணும் இரண்டு இனத்தவர்களாக இருந்ததைப் போல, இது மீண்டும் அதே போன்ற ஒரு தருணம். அப்படியானால் ஏன், இயேசு கூறினார், "இல்லை, அதில் எந்த வித்தியாசமும் இல்லை." தேவன் எல்லா மனிதர்களையும் படைத்தார்.



என்பது உங்களுக்குத் தெரியும், அவர்கள் உங்கள் பாக்கெட்டைத் தேட விரும்புவார்கள், "அப்பா, எனக்கு ஏதாவது கொண்டு வந்தீர்களா?" அது எதுவாக இருந்தாலும், அவர்கள் எதையாவது எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் இந்தக் காகிதங்களை எடுத்தார்கள், அங்கே சின்ன ரெபெக்கா அதைப் படிப்பதை நான் பார்த்தேன். அவள் திரும்பி வந்தாள். அவள் கேட்டாள், "அப்பா, நீங்கள் வெளிநாட்டில் இருந்தபோது இந்தச் சிறு பிள்ளைகளைப் பார்த்தீர்களா?" அவள் கூறினாள், "ஒருவேளை நான் எனது ஒரு ஜோடி காலணிகளை அவர்களுக்குக் கொடுக்க முடியலாம்."

நான் சொன்னேன், "செல்லமே, அந்த மக்களுக்கு உதவ நாம் அதை அனுப்பி வைப்பதற்காக, அப்பா அதற்கு உதவ அவருடைய சில அன்பு காணிக்கைகள் மற்றும் அது போன்ற காரியங்களை வழங்குவார்."

13 உங்களுக்குத் தெரியும், இயேசு சொன்னார், "எனக்கு உடைகள் தேவைப்பட்டது, நீங்கள் எனக்கு உடுத்தவில்லை. நான் பசியாக

இருந்தேன், நீங்கள் எனக்கு உணவளிக்க வில்லை." எனவே நாம் அந்த விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். தேவன் அந்த இளம்பெண்ணை ஆசீர்வதிப்பாராக.

இன்று அவள் வானொலி ஒலிபரப்பிற்குச் சென்றபோது அவளைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஒரு அழகிய தோற்றமுடைய இளம்பெண், மற்றும்—மற்றும் அவள் அறிவாற்றல் கொண்டவள், படித்தவள், என் அபிப்பிராயத்தின்படி, இந்த—இந்த தேசத்தில் நமக்குக் கிடைத்துள்ள சிறந்த செவிலியர்களில் ஒருவர். அல்லது அவர் அட்லாய் ஸ்டீவன்சனுடைய தனிப்பட்ட செவிலியர் அல்லது அது போல யாரோ என்று நான் நம்புகிறேன், அப்படித்தானே? [ஒரு மனிதர் சொல்கிறார், "சரி."] எல்லாவற்றையும் தியாகம் செய்து, கர்த்தராகிய இயேசுவுக்காகத் தன் உயிரைக் கொடுக்க ஒரு நாட்டிற்குச் செல்லும் ஒரு பெண்மணி, அதற்கு மிகப்பெரிய அர்த்தம் இருக்கிறது. அதைச் செய்வதற்கு அது தேவனிடமிருந்து வந்திருக்க வேண்டும். நான் நிச்சயமாக இந்த இளம்பெண்ணை மெச்சுகிறேன்.



வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது**. இங்கே வாருங்கள், சகோதரி.

எங்கள் அன்புள்ள பரலோகப் பிதாவே, இந்த ஏழைத் தாய் இங்கே நிற்கும்போது, அவர் தனது சகோதரனின் சமூகத்தில் அல்ல, உமது சமூகத்தில்தான் நிற்கிறார் என்பதை அறிந்து, அவரை இவ்விதமாக ஆக்கி, அவரது இருதயத்தின் ஆழமான விருப்பங்களை இன்றிரவு அவருக்கு அருளுவீராக. மேலும் அவர் கேட்கும் விண்ணப்பத்தை நீர் அருள வேண்டும் என்று, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென். என் சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நீ விசுவாசிக்கக்கூடுமானால், விசுவாசிக்கிற வனுக்கு எல்லாம் கூடும். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இப்போது, மிகவும் பயபக்தியுடன் இருங்கள்.

என்னைப் பற்றியும் அவருக்கு எல்லாம் தெரியும். அவர்—அவர் நித்தியத்தின் தேவன்.

நிச்சயமாக, நீங்கள் எந்த அளவுக்கு வியாதியாய் இருக்கிறீர்கள், அல்லது உங்கள் வியாதி என்ன, அல்லது நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதைக்கூட அறிந்துகொள்ள எனக்கு எந்த வழியுமில்லை. மேலும், ஆனால் தேவன் அறிவார். இப்போது உங்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது, இப்போது உங்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர் எனக்குச் சொன்னால், உங்களுக்குள் இருக்கும் முழுமையோடும் அதை நீங்கள் ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பீர்களா?

இப்போது, நீங்கள் வேறு ஒருவருக்காகவும் நிற்கிறீர்கள். அது சரிதான். அது ஒரு மகனுக்காகவும் கூட. அவனுக்கு நெஞ்சில் ஏதோ பிரச்சனை இருக்கிறது, நெஞ்சு வலி. அது சரிதான். மேலும்—மேலும் அது இருளாக இருக்கிறது; அவன் நிழலிடப்பட்டிருக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல. அது சரிதான். அவன் ஒரு பாவி. அவன் இரட்சிக்கப்பட



14 இப்போது, வேதத்தின் இரண்டு பகுதிகளை நான் வாசிக்க விரும்புகிறேன், சில நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்வேன், உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக நாம் ஜெப வரிசையை ஆரம்பிப்போம், நாங்கள் திரும்பிச் செல்வதற்கு அவசரமாக இருக்கிறோம், பின்னர் சில வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கலாம்.

யோவான் நற்செய்தி 17-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில், நமது இரட்சகரின் இந்த அன்பான வார்த்தைகள் இருக்கின்றன.

**இயேசு இவைகளைச் சொன்ன பின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:**

**பிதாவே, வேளை வந்தது, ... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.**

மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 1 ஆம் அதிகாரம் முதல் இரண்டு அல்லது மூன்று வசனங்களில்...

**சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.**

**இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.**

**இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர் களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.**

இது ஒரு வேதப் பகுதியாக இருந்தால், சில நிமிடங்களுக்கு நான் இதை எடுத்துக் கொள்வேன், "காலம் சமீபமாயிருக்கிறது."

15 உங்களுக்குத் தெரியும், தேவன் தமது வயதான தீர்க்கதரிசிக்கும், அந்தக் காலத்தின் கடைசி தீர்க்கதரிசிக்கும், இயேசுவுடன் இருந்த அசல் தீர்க்கதரிசிகளில் ஒருவருக்கும் கொடுத்த



மேலும் இந்த அன்பான பெண்மணி கேட்ட ஒவ்வொரு விண்ணப்பத்தையும் நீர் அவருக்கு அருள வேண்டும் என்று, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் ஜெபிக்கிறோம். ஆமென்.

சகோதரி, இப்போது பயப்பட வேண்டாம். உங்களுக்கு எல்லாம் சரியாகிவிடும். உங்களைச் சுற்றிலும் அது வெளிச்சமாக மாறியது; எல்லாம் சரியாகிவிடும். ஆமென்.

விசுவாசியுங்கள். இப்போது, நீங்கள் இங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் ஒருமுறை விசுவாசம் வைத்து, அதை மெய்யாகவே நம்பி, நீங்கள் அவ்வாறு செய்கிறீர்களா இல்லையா என்று பாருங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்.

60 சரி, அம்மா, நீங்களும் நானும் ஒருவருக்கொருவர் முன்பின் அறிமுகமில்லாத வர்களாக இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன், ஆனால் கர்த்தராகிய இயேசுவுக்கு நம் இருவரையும் தெரியும். உங்களைப் பற்றி அவருக்கு எல்லாம் தெரியும்,

59 இப்போது, சகோதரி, நீங்கள்... அது உண்மையா? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? என்னை அல்ல, அவரை. இயேசுவை. அப்படியானால் அவர் இங்கே இருக்கிறார். அப்படியானால் அவர் மரிக்கவில்லை. அப்படியானால் கலிலேயாவிலிருந்த அதே நபர் இன்றிரவு இங்கே, உங்களுடனே இங்கேயே இருக்கிறார். வாருங்கள், சகோதரி.

கோடிக்கணக்கானோருக்கு இரக்கம் காட்டும் எங்கள் அன்புள்ள பரலோகப் பிதாவே, இந்த கடைசி நாட்களில் வெளிச்சம் பிரகாசிக்கிற போது, வந்து வெளிச்சத்தைக் கொண்டுவந்த அதே இயேசுவே. வேதம் சொல்லுகிறது, "இருளில் அமர்ந்திருந்தவர்களுக்கு, பெரிய வெளிச்சம் உதித்தது."

ஆரம்ப நாட்களில் கிழக்கிலும், மேற்கிலுள் ளவர்களுக்கும், இப்போது, மாலை நேரத்தில், பெரிய வெளிச்சம் வந்திருக்கிறது. என்ன? அதே வெளிச்சம் மீண்டும் பிரகாசிக்கிறது, அவர் வாக்களித்தபடியே உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு. நீர் இன்றிரவு இங்கே இருக்கிறீர். நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.



வெளிப்பாடு இதுவாகும்: யோவான், அவருடைய மார்பில் சாய்ந்திருந்த அன்பான யோவான் என்று பல இறையியலாளர்களால் நம்பப்படுகிறார். தேவனுடைய வார்த்தையி னிமித்தம் அவர் பத்மு தீவுக்கு நாடுகடத்தப் பட்டிருந்தார். கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றிச் சென்ற பிறகு, ஒரு காலத்தில், தங்களுக்குச் சிறிது உணவு கொடுக்க மறுத்ததால், நகரத்தை எரிக்க விரும்பிய ஒரு மனிதராக அவர் இருந்தார், "வானத்திலிருந்து அக்கினியை வரவழைக்கலாமா?" என்று கேட்டார். ஆனால், கிறிஸ்து அவரது வெளிப்புறத்தை விட்டு உள்ளே வந்ததிலிருந்து தேவன் அவரை எப்படி மாற்றியிருந்தார். புதிய ஏற்பாட்டின் காதலர் என்று அறியப்பட்ட அவர் பத்மு தீவில் இருந்தார்: அன்பான யோவான். வார்த்தையைப் பிரசங்கித்ததற்காக அங்கு நாடுகடத்தப்பட்டு, கர்த்தருடைய நாளில் அவர் ஆவிக்குள்ளானார், தேவன் ஒரு தூதனை அனுப்பி, வரப்போகும் காரியங்களை அவருக்குச் சாட்சியாக அறிவித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடைசி நாட்களில் சந்திக்க வேண்டிய அனைத்து

காரியங்களின் நிறைவேற்றத்தையும் அவர் தீர்க்கதரிசனமாக உரைத்தார், மேலும் அந்தப் புத்தகம் முத்திரிக்கப்பட்டது. அதனுடன் வேறு எதையும் சேர்க்க முடியாது அல்லது அதிலிருந்து எதையும் எடுக்க முடியாது.

16 இந்த அற்புதமான வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை நாம் படிக்கும்போது, அங்கு இருந்துள்ளது... எனது சொந்த சபையில், நான் ஒருமுறை, அதை முழுவதும் படித்து முடிக்க கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் எடுத்துக்கொண்டேன், மெதுவாக, ஒவ்வொரு இரவும் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை மட்டுமே போதித்து, அதை மீதமுள்ள வேதாகமத்துடனும் மற்றும் கடந்து போன காலங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தேன். இப்போது, எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு. அது ஒரு பழைய அமெரிக்கப் பழமொழி, அது உண்மையும்கூட. உங்கள் பயிரை நடுவதற்காக நீங்கள் நிலத்தை உழ வேண்டிய நேரங்கள் உண்டு. உங்கள் விதையை நீங்கள் விதைக்க வேண்டிய நேரங்கள் உண்டு; உங்கள் விதையை நீங்கள் அறுவடை செய்யும் நேரமும் உண்டு. தேசங்கள் தொடங்க வேண்டிய



ஒரு—ஒரு கட்டி உங்களுக்கு இருக்கிறது. அந்த கட்டி இங்கே வெற்றுக்கண்ணுக்குத் தெரியாதபடி மறைந்திருக்கிறது, ஏனென்றால் அது உங்கள் உதட்டின் உட்புறத்தில் உள்ளது. அது சரிதான்.

மேலும் நீங்கள் மிகவும் மனவேதனையடைந்துள்ளீர்கள். நீங்கள்—நீங்கள்... உங்கள் இருதயத்தின் ஆழத்தில், நீங்கள் ஒரு தாய். நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கும் ஒரு—ஒரு குழந்தை உங்களுக்கு இருக்கிறது, அது ஒரு சிறுவன்... அந்தச் சிறுவனுக்கு குடலில் ஒரு பாதிப்பு இருக்கிறது. அந்தப் பையனின் குடலில் அல்சர் (புண்) இருப்பதாக மருத்துவர் கூறுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

மேலும் அந்தப் பையன் இரட்சிக்கப்படவில்லை. அவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல, அவனுக்காக ஜெபிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், நான் அதன்மீது ஜெபிப்ப தற்காக, அந்த நோக்கத்திற்காகவே நீங்கள் உங்கள் கையில் ஒரு கைக்குட்டையை வைத்திருக்கிறீர்கள். கர்த்தர் உரைக்கிறார் என்பது இதுவே.

உங்கள் கையை உயர்த்துங்கள். ஏதோ நடக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அதுதான்—எவருடைய புகைப்படம் எடுக்கப் பட்டு வாஷிங்டனில் இருக்கிறதோ, தேவனு டைய அந்த தூதனானவர் இப்போது நமக்கு நடுவில் இருக்கிறார். மேலும் அவர்... நான் என்னை அவருக்கு ஒப்புக்கொடுக்க முடிந்தால், அந்தப் பெண்ணின் வாழ்க்கை எனக்கு முன்பாக வரும் வரை அவர் என்னை அபிஷேகம் செய்வார், அப்போது நான் அதைப் பேசுவேன்.

58 ஆம், நான் அந்தப் பெண்ணைப் பார்க்கிறேன். அவர் ஒரு—ஒரு நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவர் உண்மையிலேயே மிகவும் பதட்டமாக இருக்கிறார். அவர் அங்குமிங்கும் நடப்ப தையும், தனது கைகளை ஒருவிதமாகப் பிடித்துக் கொண்டிருப்பதையும் நான் காண்கிறேன்.

அவர் ஏதோவொன்றைக் குறித்து வருத்தமாக இருக்கிறார்; ஏதோவொன்று அவளை கலக்கமடையச் செய்திருக்கிறது. அது சரிதான். மேலும் நீங்கள் கவலைப்படும்படியான



நேரங்கள் உள்ளன; தேசங்கள் முடிவடைய வேண்டிய நேரங்கள் உள்ளன.

17 அந்த நேரம்... ஒவ்வொரு மனிதனும் நீங்கள் ஒரு முடிவை எடுக்கும் ஒரு நேரத்திற்கு வர வேண்டும். நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா இல்லையா என்பதை நீங்கள் தீர்மானிக்கும் ஒரு நேரம் இருக்க வேண்டும். பின்னர் நீங்களும் உங்கள் காதலியும் சேர்ந்து வாழப் போகிறீர்களா அல்லது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா அல்லது இல்லையா என்று ஒரு முடிவை எடுக்க வேண்டும். வாழ்க்கையில் எடுக்க வேண்டிய அனைத்து வகையான முடிவுகளும் உள்ளன, அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீண்ட நேரம் தாமதமாகும், பின்னர் அதைத் தீர்க்க வேண்டிய ஒரு நேரம் வரும். அதுதான் கடைசி நேரம்; அது இப்போது ஏதாவது ஒரு வழியில் நடக்க வேண்டும். கிறிஸ்தவ நண்பரே, நாம் கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நான் நம்புகிறேன், வேதாகமத்தில் எழுதப்பட்ட அனைத்து காரியங்களும், இவை அனைத்தும் இப்போது நிறைவேறுவதற்கான நேரம் வந்துவிட்டது.

இப்போது நாம் நடப்பதைக் காணும் காரியங்கள், தேவனுடைய வார்த்தைக்குச் சரியாக ஏற்ற பருவத்தில் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன்.

18 இப்போது, தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி மனிதர்களைப் பூமியில் வைத்த ஒரு காலம் இருந்தது. பின்னர் மனிதன் பெருகி, பூமியில் பெரியவனாகி, நகரங்களைக் கட்டியெழுப்பி, அநேக மக்கள் முழுமையாகப் பெருக ஆரம்பித்தபோது, மக்களின் இருதயங்களில் பொல்லாப்பு குடியேறியது, தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்ப வேண்டிய நேரம் வந்தது. தேவன் அந்த நியாயத்தீர்ப்புக்கு ஒரு காலத்தை நியமித்தார். பின்னர், நோவா என்ற பெயரில் அவருக்கு நீதியைப் பிரசங்கிக்கும் ஒரு பிரசங்கியாரும் இருந்தார், அவர் நூற்று இருபது ஆண்டுகள் பிரசங்கித்தார், அவருடைய சொந்தக் குடும்பத்தைத் தவிர மற்ற அனைவராலும் அவர் நிராகரிக்கப்பட்டார். நோவா தேவனால் தீர்க்கதரிசனம் உரைத்தது நிறைவேற வேண்டிய நேரம் வந்தது. ஜலப்பிரளய அழிவு ஏற்பட்டது, தேவன்



இப்போது, அவர் இன்றிரவு அதே காரியத்தைத் திரும்பச் செய்வாரானால், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார். அது—அதை மட்டும்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, இங்கே நம்முடன் இருந்தால், அது என்றென்றைக்கும் அவர் மீது அதைத் தீர்த்துவைக்க வேண்டும். அது அப்படி இருக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரித்த ஒரு மனிதர், இன்றிரவு இன்னமும் இங்கே உயிருடன் இருக்கிறார். மேலும் அது—அது அதைத் தீர்த்துவைக்கிறது. காண்கிறீர்களா? அப்படியானால் நமது மார்க்கம் வீணானதல்ல; அது உண்மையானது.

அந்தப் பெண்மணி, சபையினர் என்னைக் கேட்க முடியுமானால், என் சத்தத்தைக் கேட்க முடியுமானால், அவர் கொஞ்சம் மங்கலாவது போல் தெரிகிறது, ஏனென்றால் அவருக்கும் எனக்கும் நடுவில் அந்த வெளிச்சம் நிற்கிறது, அது எங்கள் நடுவில் அசைவாடுகிறது. ஏதோ நடக்கிறது என்பதை அந்தப் பெண்மணி உணர்ந்திருக்கிறார். அது சரி என்றால், அம்மா,

உயிர்த்தெழுதலை விசுவாசிப்பீர்களா, அது—அது உண்மையானது.

இது அதைத் தீர்த்துவைக்க வேண்டும். அந்தப் பெண்மணிக்குத் தன்னைத் தெரியும், நான் அவரை அறியேன் என்றும், அவர் என்னை அறியார் என்றும் அவர் தனது கையை உயர்த்தியுள்ளார், மேலும் ஒருவரை யொருவர் அறியாமல் நாம் இருவரும் இங்கே ஒன்றாக இருக்கிறோம். ஆனால் மேடையிலே பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார்.

இப்போது இயேசு, அவர் அதைச் செய்த விதமானது, அவர் கிணற்றருகே இருந்த பெண்ணிடம் கொஞ்ச நேரம் பேசினார். அதன் பின்பு அவளுடைய பிரச்சனை எங்கே இருக்கிறது என்பதை அவர் கண்டறிந்தார். அவர் அப்படிச் செய்தபோது, அவர்—அவர் அவளிடம் கூறினார். மேலும் அவர் மே—மேசியாவாக இருக்க வேண்டும், அல்லது அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும், மேசியா வரும்போது அவர் அதைச் செய்வார் என்று அவள் கூறினாள்.



தமக்கென ஒரு சந்ததியைப் பாதுகாத்து, பேழையை மிதக்கச் செய்தார்.

19 தேவன் ஆபிரகாமிடம் பேசி, அவனுடைய சந்ததியினர் நானூறு ஆண்டுகள் அந்நியராய் இருப்பார்கள் என்றும், ஒரு தேசத்தில், ஒரு புறஜாதி தேசத்தில் தீமையாக நடத்தப்படுவார்கள் என்றும், ஆனால் அவர் அவர்களை ஒரு பலத்த கையால் வெளியே கொண்டு வருவார் என்றும் சொன்ன ஒரு காலம் இருந்தது. இப்போது, தேவன் சொன்னது நிறைவேறுவதற்கு முன்பு, தேவன் இந்த தேசத்தைத் தயாராக வைத்திருக்க வேண்டியிருந்தது; அவர் மக்களைத் தயாராக வைத்திருக்க வேண்டியிருந்தது; பின்னர் அவர் அங்கு கீழே செல்வதற்கு மோசே என்பவரைத் தயாராக வைத்திருக்க வேண்டியிருந்தது. பற்சக்கரங்கள் ஒன்றாக இணைவதைப் போலவே, தேவன் எல்லாவற்றையும் ஒன்றாகச் செயல்பட வைக்கிறார். சில சமயங்களில் தூரத்தில் நாம் அதை வழியனுப்பி வைத்துவிட்டு, "இது எப்போதாவது நடக்குமா?" என்று ஆச்சரியப்படுகிறோம். ஆனால் தேவன் சொன்னபடியே அது எப்போதும் நடக்கும்.

வாக்குத்தத்தத்தின் காலம் நெருங்கியபோது, ஜோசப்பை அறியாத ஒரு பார்வோன் வந்தான். பின்னர் சிறு குழந்தைகள் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்ட நேரத்தில், தேவன் மோசேயை அனுப்பினார்; ஒரு தீர்க்கதரிசி காட்சிக்கு வந்தார். அந்த யுகத்தின் காலம் முடிவடைந்ததால் அந்த யுகத்தில் அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கத் தொடங்கின.

20 எபிரேய குழந்தைகள் ஒரு புறஜாதி சிலைக்குப் பணிந்து போகப் போகிறார்களா அல்லது உண்மையான மற்றும் உயிருள்ள தேவன் மீது தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளப் போகிறார்களா என்று ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய ஒரு காலம் வந்தது. ஒரு முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்தது. அவர்கள் சரியான முடிவை எடுத்தார்கள், தேவன் அவர்களுடன் இருந்தார். தீர்க்கதரிசியான தானியேல் தான் ஜெபிக்கத் தவறிவிட்டு, அந்த நாட்டின் மத பாரம்பரியத்தைக் காத்துக்கொள்ளப் போகிறாரா அல்லது தேவனோடு ஐக்கியம் வைத்து, ஜன்னல்களைத் திறந்து தினமும் தேவாலயத்தை நோக்கி ஜெபிக்கும் தனது வழக்கமான



அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், அது சரிதானே? எல்லாம் சபையை பூரணப்படுத்துவதற்காகவே. அவர் வார்த்தையினாலே உங்களை பிடியாவிட்டால், இப்போது அவர் இங்கே ஏதேனும் செய்யலாம், அவர் உங்களை தீர்க்கதரிசனத்தின் மூலம் பிடிக்கலாம்.

அதன்பிறகு நான், நானே...?...அதிக கல்வி அறிவில்லாததால் நான் ஒரு பெரிய ஊழியக்காரன் அல்ல, ஆனால் காரியங்களை முன்னதாகவே காணும் ஒரு தரிசனம் பார்ப்பவனாக ஒரு தெய்வீக வரம் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் எதற்காக இங்கே நிற்கிறீர்கள் என்பதை அவர் எனக்குத் தெரியப்படுத்தினால், உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பதை அறிந்து, அது என்னவென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

சமாரியப் பெண்ணுடன் அவர் அமர்ந்திருந்த அதே கிணற்றருகே நீங்கள் அமர்ந்திருந்தால் எப்படியிருக்குமோ, அதைப்போலவே சபையிலுள்ள எத்தனை பேர் அவர்மீது விசுவாசம் வைப்பீர்கள்? உங்கள் கைகளைப் பார்ப்போம்:

நீங்கள் இங்கே நின்றுகொண்டிருக்கும்போது, அவர் எனக்குக் கொடுத்த இந்த உடையை அணிந்துகொண்டு அவர் இங்கே நின்றிருந்தால், இப்போது ஒருவேளை—நீங்கள் வியாதியாயிருந்து சுகமளிக்கப்பட விரும்பினால், அவர் உங்களுக்காக மரித்தபோதே அதைச் செய்துவிட்டதாக அவர் உங்களிடம் கூறுவார்.

ஆனால் இப்போது, அவர் உங்களுடைய இரட்சிப்புக்கும் சுகத்திற்கும் ஏற்கனவே—ஏற்கனவே கிரயத்தைச் செலுத்திவிட்டபடியால், அவர் செய்யக்கூடிய ஒரே காரியம், இனி அதைக் குறித்து அவர் செய்வதற்கு ஏதுமில்லை, ஆனால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும், அது சரிதானே? கட்டிடத்திலுள்ள எத்தனை ஊழியர்களுக்கு இது வேதப்பூர்வமானது என்று தெரியும், பார்ப்போம், பிரசங்கிமார்களே. ஊழியர்களைப் பாருங்கள், அது சரி என்று தெரியும். அது, நாம் செய்யக்கூடியது எதுவுமில்லை, அது ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டது.

57 ஆனால் அவர் சபைக்குள் அனுப்பியிருக்கிறார், முதலாவது எதை?



நடைமுறையைப் பின்பற்றப் போகிறாரா என்று முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தது. தானியேல் தனது—தனது முடிவை எடுக்க வேண்டியிருந்தது. இறுதியாக அவர் அந்த முடிவை எடுக்க வேண்டிய ஒரு இடத்திற்கு அந்த நேரம் அவரைக் கட்டாயப்படுத்தியது.

21 தேவன், அவர் எதையாவது பேசும்போது, அதை அந்த இடத்திற்கு நிறைவேறச் செய்கிறார். தானியேல் ஒரு முடிவை எடுக்க வேண்டியதாய் இருந்தது. அவர் நேராகத் தனது ஆராதனை ஸ்தலத்திற்குச் சென்று, ஜன்னல்களைத் திறந்து, தேவனை ஆராதித்தார். தேவன் தமது தீர்க்கதரிசியைப் பாதுகாத்தார். தேவன் எப்போதும் அதைச் செய்வார்.

வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் இருக்க வேண்டிய ஒரு காலம் வந்தது. ஏசாயா, எண்ணூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் ஒன்று இருக்கும் என்று தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார். மக்களுக்கு அதைக் குறித்து எவ்வளவு

குறைவாகத் தெரிந்திருந்தது. அவர்கள் அதை எவ்வளவு குறைவாக எதிர்பார்த்திருந்தார்கள். காலங்கள் கடந்து சென்றன, மேலும் அவர்கள்—மேலும் இடங்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைப் பற்றிய எண்ணம், மற்றும் அந்த காரியங்களைப் பற்றிய எண்ணம் மக்களின் இருதயங்களிலிருந்து மங்கிப்போயின.

22 திடீரென்று, நீல வானத்திலிருந்து வருவது போல, நாம் சொல்வது போல, வனாந்தரத்திலிருந்து ஒரு மனிதர் வந்தார், திடகாத்திரமான தோற்றமுடைய ஒரு மனிதர், மனந்திரும்புதலைப் பிரசங்கித்து, மரத்தின் வேர் அருகே கோடரி வைக்கப்பட்டிருக்கிறது என்று மக்களிடம் கூறினார். நல்ல கனிகொடாத ஒவ்வொரு மரமும் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றார்.

மேலும் அவர், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன், ஆனால் எனக்குப் பின்னால் ஒருவர் வருகிறார்" என்றார். தேவனின் தீர்க்கதரிசனத்தைக் குறித்து மக்கள் அறிந்திருந்திருந்தால், தீர்க்கதரிசனத்தின்படி, கர்த்தருக்கு வழியை



சரி, ஐயா. இது... சகோதரர் வுட், நீங்கள்... இங்கே இருக்கும் இந்த பெண்ணா? சரி. இப்போது, அந்த பெண்மணி என்னை நோக்கி நடந்து வரும்போது, எனக்குத் தெரிந்தவரை, அவர் எனக்கு முன்பின் அறிமுகமில்லாதவர். எனக்கு அவரைத் தெரியாது. அவர் அங்கு நின்று, கவனித்து, என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சிறிய பெண்மணி. ஜெப வரிசையில் அவர் தான் முதலாவது வந்திருக்கிறார். அவருக்கு இன்று ஒரு ஜெப அட்டை கொடுக்கப்பட்டது, அல்லது—அல்லது அவர்கள் அதை எப்போது கொடுக்கிறார்களோ, மேலும் அவர் இங்கே முதலாவதாக அழைக்கப்பட்டிருக்கிறார்.

அம்மா, நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்களா? நாம் ஒருவரை யொருவர் அறிய மாட்டோம், மேலும் எனக்கு உங்களைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பது உங்களுக்குத் தெரியும், உங்களைப் பற்றி தெரிந்துகொள்ள எனக்கு எந்த வழியுமில்லை.

ஆனால் இப்போது இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தால்,

அமர்ந்திருங்கள். அவர்கள் என்னை அதிக நேரம் இருக்க விடமாட்டார்கள்.

56 இயேசு உயிருடன் இருக்கிறார் என்பது உங்களுக்கு நிரூபிக்கப்படுமானால், அவர் அளித்த ஒவ்வொரு வாக்குத்தத்தமும் இயேசுவுக்குள் உங்களுடனே இங்கேயே இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது சரி. எனவே இப்போது, நினைவில் கொள்ளுங்கள், எல்லா துதிகளும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கே உரியது. நாம் அனைவரும் ஒன்றாகச் சொல்வோம். "எல்லா துதிகளும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கே."

இப்போது, அவருடைய நாமத்தினிமித்தமும், அவருடைய வார்த்தையினிமித்தமும், அவருடைய ஜனங்களினிமித்தமும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இந்த சபையினரை இப்போது என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறேன். தயவுசெய்து பயபக்தியோடு இருந்து, இந்த வழியே கவனியுங்கள்.



ஆயத்தப்படுத்தவே யோவான் வந்தார் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

அவர், “நான் அவர் அல்ல, ஆனால் எனக்குப் பின்னால் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளை அவிழ்க்க நான் பாத்திரவான் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். அவருடைய தூற்றுக்கூடை அவருடைய கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி—கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்” என்றார்.

23 பின்னர் கலிலேயாவிலிருந்து இயேசு அவராலே ஞானஸ்நானம் பெறுவதற்காக யோர்தானுக்கு வந்தார்: சுமார் முப்பது வயதுடைய சாதாரண தோற்றமுடைய ஒரு இளைஞர் தண்ணீருக்குள் நடந்து வந்தார். தேவதூதர்கள் பாடி, சாஸ்திரிகள் நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து வந்த அந்த குழந்தை பருவ காலத்திலிருந்து இந்த வருடங்கள் முழுவதும், அவரைக் குறித்து அதிகம் எதுவும் சொல்லப் படவில்லை. ஆனால் அவர் உண்மையாகவே

தேவனுடைய குமாரனாக, அபிஷேகம் பண்ணப் பட்ட மேசியாவாக இருக்க வேண்டியிருந்த போது, தேவன் வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் கொடுத்தார்.

யோவான், "நான் அவரை அறியாதிருந்தேன்" என்றார். ஆனால் யோவானிடம் சொல்லியிருந்தவர், அந்த நபர் யார் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கான நேரம் வந்திருந்தது... அவர் சொன்னார், "ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர், 'ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்' என்று என்னிடம் சொல்லியிருந்தார்.'' அது நிறைவேற வேண்டிய நேரம் வந்தது.

இயேசு தமது ஊழியத்திற்குச் செல்வதற்கும், அற்புதங்களும் அடையாளங்களும் ஆச்சரியங்களும் செய்யப்படுவதற்கும் நேரம் வந்தது. அது—பரிசேயர்கள் அவரை நிராகரிப்பதற்கும், திருச்சபை அவரைப் புறக்கணிப்பதற்குமான நேரம் வந்தது. சிலுவையிலறையப்படுவதற்கான



கொண்டிருக்கும் போது, நாம் வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்.

இப்போது, பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் செய்தால், அவர் செய்வார் என்று எனக்குத் தெரியாது, நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்கப் போகிறேன். சில நிமிடங்களுக்கு நீங்கள் அமைதியாக அமர்ந்து, இந்தப் பக்கமாகப் பார்த்து, ஜெபிப்பீர்களா? நான் இன்று இரவு மிகவும் சோர்வாக இருக்கிறேன் (காண்கிறீர்களா?), மிகவும் சோர்வாக இருக்கிறேன். நான் ஒவ்வொரு மாதமும் கூட்டங்களை முடித்துவிட்டு இப்போதுதான் வந்திருக்கிறேன், மேலும் எனக்கு ஒரு நாள் ஓய்வு கிடைப்பதற்கு முன்பு இன்னும் ஏறக்குறைய ஒரு மாதம் செல்ல வேண்டியிருக்கிறது. காண்கிறீர்களா? மேலும் நான்—நான்—நான் இன்று இரவு நீங்கள் எனக்கு உதவுவீர்கள் என்று ஜெபிக்கிறேன், உதவுவீர்கள் அல்லவா? தயவுசெய்து அமர்ந்திருங்கள்; குழந்தைகளை உங்கள் அருகிலேயே வைத்துக்கொள்ளுங்கள்; சற்று அமைதியாக

வேதாகமம் போதிக்கிறதா? அது சரியா? நிச்சயமாக, வேதாகமம் அதைப் போதிக்கிறது. அப்படியானால் உங்களின் பலவீனத்தின் உணர்வைக் கொண்டு நீங்கள் அவரை எவ்வாறு தொடப் போகிறீர்கள்? அவரை விசுவாசியுங்கள். அப்போது அவர், மேலும் நமக்குள் இருக்கும் அவருடைய தெய்வீகப் பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவியானவராக, அவர் அப்போத செய்ததைப் போலவே அவர் அதனை மீண்டும் வெளிப்படுத்துகிறார். அது வேதவசனத்திற்கும் மற்றும் வேதவசனம் செயல்படும் விதத்திற்கும் முற்றிலும் இசைவாக இல்லையா... அது வேதாகமத்தின்படி, வேதாகமம் செயல்படும் விதத்தின்படி இருக்கும் என்று எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சரி. நம்மிடம் எத்தனை பேர் இருக்கிறார்கள்... இப்போது கீழே நாம் கணிசமான ஒரு கூட்டத்தைப் பெற்றிருக்கிறோம் என்று காண்கிறேன், சகோதரர் உட் உங்களிடம் இருக்கிறதா? சரி. நேரத்தின் அருமை கருதி, மீதமுள்ளவர்களை அவர்கள் வரிசைப்படுத்திக்



நேரம் வந்தது. வெளிப்பாட்டிற்கான நேரம் வந்தது. உயிர்த்தெழுதலுக்கான நேரம் வந்தது. இவை அனைத்திற்கும் காலக் கெடுபாடுகள் உள்ளன.

24 பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைவதற்காக இந்த வருடங்கள் முழுவதும் காத்திருந்ததற்கான நேரம் வந்தது. அவள் பல வருடங்களாக மருத்துவர்களிடம் சென்றிருந்தாள், ஆனால் அவளுடைய நோய் தொடர்ந்து வெளியேறிக்கொண்டே இருந்தது. மருத்துவர்கள் அவளுக்கு மருந்துகளைக் கொடுத்தார்கள், ஆனால் எதுவும் அதை நிறுத்தவில்லை. ஆனால் ஒரு நேரம் வந்தது, அவள் தன் இருதயத்திற்குள், “நான் இவரைக் குறித்துக் கேள்விப்படுகிறேன், இவர் மேசியாவாக இருப்பார் என்று நம்புகிறேன். நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால், நான் முழுமையாக குணமடைவேன்” என்று சொன்னாள்.

நீங்கள் அதை உங்கள் இருதயத்தில் நம்பினால், நீங்கள் அதை நம்பினால், தேவன்

அதை உங்களுக்கு முன்பாகக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறார்.

இப்போது, இயேசு வந்திருந்து, அன்று காலை அவள் நதியை நோக்கிப் பார்த்து, சோர்வடைந்த, களைத்துப்போன ஒரு கூட்ட மனிதர்களுடன் அவர் படகிலிருந்து இறங்குவதைக் கண்டு, "சரி, அவர்கள் அவரைப் பார்த்துச் சிரிப்பதை நான் கேட்கிறேன். ஒருவேளை நான் கீழே போகாமல் இருப்பதே நல்லது" என்று அவள் சொல்லியிருந்தால் என்னவாகியிருக்கும்? அப்படியானால் அது ஒருபோதும் நடந்திருக்காது. ஆனால் தேவன் அவரை வெளிப்படுத்தினார். தேவன் அவரை வெளிப்படுத்தியபோது, அவள் சென்று, தொட்டு, நம்பினாள், ஏனென்றால் அவளுக்கான நேரம் அந்த நேரமாக இருந்தது.

25 அவர் நாத்தானியேலிடம் அங்கே, “நீ எங்கே இருந்தாய் என்று, அல்லது உன் பெயர் என்ன என்று நான் உன்னிடம் சொன்னால், அதை நீ நம்பினால், நீ... பிரேதக்குழிகளிலுள்ள மரித்தவர்கள் தேவனுடைய குமாரனின் சத்தத்தைக் கேட்டு வெளியே வரும் ஒரு காலம்



எத்தனை பேர் இருக்கிறீர்கள், அப்படியிருந்தும் இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்குவார் என்று உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா, உங்கள் கரத்தை உயர்த்தி, தேவன் அதனை உங்களுக்கு அருளும்படி ஜெபிப்பீர்களா? சரி.

நான்—நான் உங்களிடம் இதனைக் கேட்கிறேன், இயேசு நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராக இருந்தால்... அங்கே வெளியே உள்ள வேதாகம மாணவர்களே, கவனியுங்கள்; அங்கே ஊழியர்கள் அமர்ந்திருக்கிறார்கள். நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

55 இப்போது, அவர் உயிர்த்தெழுந்து விட்டபடியினால்... "சகோதரர் பிரன்ஹாம், அவர் சரீரப் பிரகாரமான தேகத்தில் இருந்தபோது அந்த ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்" என்று நீங்கள் கூறினீர்கள். நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அவர் நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியர் என்று எபிரெயர் புஸ்தகத்தில்

ஆங்கிலம் பேசத் தெரியலாம், அல்லது வேறு ஏதாவது, அவர்கள் உதவ முடியும். நன்றி.

மேலும் இப்போது, இங்கு யாராவது இருந்து, ஆசீர்வதிக்கப்பட்ட பரலோகப் பிதா தமது உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை நமக்கு எப்படித் தருகிறார் என்பதைக் கண்டிருந்து, அடுத்த பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்குள் நீங்கள் செல்ல வேண்டியிருந்தால், சரி, நீங்கள் விரும்பினால்—நீங்கள் இப்போதே செல்லலாம், மேலும்... யாராவது மோசமான நிலையில் இருந்தால், நாம் வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிக்கும் போது சில நிமிடங்களுக்கு மிகவும் அமைதியாகவும் பயபக்தியாகவும் இருங்கள். தேவன் ஏதேனும் செய்வார் என்று நான் ஜெபிக்கிறேன்.

நம்மிடம் 10, 11, 12, 13, 14, 15 இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன், T-11, 12, 13, 14, 15 ஆகிய ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள் இப்போது வருவீர்களா. இப்போது, இங்கே இருக்கும் உங்கள் அனைவருக்கும், ஜெப அட்டைகள் இல்லாதவர்கள் அங்கே



வரும்" என்று சொன்னதற்கான நேரம் வந்தது. அது நிறைவேறுவதற்கான நேரமும் வந்தது.

அவர் லாசருவின் கல்லறைக்கு நடந்து சென்றார், அங்கே அப்போஸ்தலர்கள் அவரைச் சுற்றி நின்றார்கள். இயேசு நான்கு நாட்கள் மரித்திருந்த ஒரு மனிதனை, அவர் அப்படிச் சொல்லியிருந்தபடியால், மீண்டும் உயிருக்கு அழைத்தார்.

இப்போது, நண்பரே. ஆலயத்தை அழித்துச் செல்வதற்கான நேரம் வந்தது. தானியேலால் சொல்லப்பட்ட பாழாக்கும் அருவருப்பை மீண்டும் நிறுவுவதற்கான நேரம் வந்தது. இப்போது, அது முற்றுகைக்குச் சென்றிருக்கிறது. தீர்க்கதரிசி, "அது இருளுமல்ல, வெளிச்சமுமல்லாத ஒரு நாளாக இருக்கும். அது ஒரு நாள்... ஆனால் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்" என்று சொன்ன நேரம் வந்து, கடந்து கொண்டிருக்கிறது.

26 இப்போது, நாகரிகம் கிழக்கிலிருந்து பயணிப்பதைப் பார்ப்போம். நாம் கொண்டிருக்கும் மிகப் பழமையான நாகரிகங்களில்

ஒன்றாக சீனா கருதப்படுகிறது. நாகரிகம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பயணித்தது. இப்போது, நாம் மேற்கு கடற்கரைக்கு நேராக வந்து மீண்டும் சுற்றி வந்துவிட்டோம். சூரியன் உண்மையாகவே கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது.

இப்போது, நான் உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். கிழக்கத்திய மக்கள் என்றால்... கிழக்கில் உதிக்கும் சூரியன் நிச்சயமாகவே முதலில் கிழக்கத்திய மக்கள் மீது பிரகாசித்தது. அவர்கள் ஒரு எழுப்புதலைப் பெற்றார்கள். பல ஆண்டுகளாக தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டிருந்த பெந்தெகொஸ்தே அதுதான், தேவன் எவ்வாறு தமது திருச்சபையைத் தொடங்கி, பெரிய அடையாளங்களையும் ஆச்சரியங்களையும் செய்யும் ஒரு கூட்ட மக்களை அனுப்புவார் என்பது அதுதான். பெந்தெகொஸ்தே வருவதற்கான நேரம் வந்தது.

அவர்கள் மேல் அறையில் கூடியிருந்தார்கள். அவர்கள் தங்கள் மதத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் இருந்தார்கள். யோவேல் மூலமாக



மிருந்து பிள்ளைகளை கூட்டிச் சேர்க்க, பரிசுத்த ஆவியானவர் தமது பூரணத்தோடு பூமிக்கு வந்திருக்கிறார், அதனால்தான் இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன. தேவனுடைய மகிமைக்காகவும், உமது வார்த்தையின் நிறைவேறுதலுக்காகவும் நாங்கள் இதனைக் கேட்கிறோம், ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

54 சரி. இப்போது ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், எண் 1-லிருந்து ஆரம்பித்து, இந்தப் பக்கத்தில் வரிசையாக நில்லுங்கள், உங்களில் முதல் ஐந்து பேர், வேண்டாம்—எனவே நீங்கள் அனைவரும் மொத்தமாக வர வேண்டாம்... 1, 2, 3, 4, 5 யாரிடம் இருக்கிறது? சரி, நேராக இங்கே கீழே வாருங்கள். 6, 7, 8, 9, 10, அவர்கள் கூடி வரட்டும். [யாரோ ஒருவர் சகோதரர் பிரன்ஹாமிடம் பேசுகிறார்] தயவுசெய்து.

சரி. அவர்கள் கீழே செல்லும்போது, சகோதரர் உட், அல்லது சகோதரர் போஸ், அல்லது அவர்களில் யாராவது கீழே சென்று உதவினால், ஒருவேளை அவர்களில் சிலருக்கு

செய்ய வேண்டியிருந்தது. இப்போது, இன்றும், அவர் அப்படியே இருக்கிறார்.

53 இப்போது, நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அவர் இப்போது இங்குள்ள தமது மக்களின் மத்தியில் வந்து, அவர் அன்று செய்த அதே காரியங்களைச் செய்வாரானால், உங்களில் எத்தனை பேர் உங்கள் முழு இருதயத்தோடும் அவரை விசுவாசிப்பீர்கள், உங்கள் கரங்களை உயர்த்துங்கள்? நீங்கள் யாராக இருந்தாலும், புதியவர்களோ அல்லது பழையவர்களோ? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பிதாவே, நீர் இவர்களுடைய கரங்களைக் காண்கிறீர். இவர்கள் உமது பிள்ளைகள் என்பதை நாங்கள் அறிவோம், அவர்கள் உம்மை விசுவாசிக்கிறார்கள். இப்போது, நீர் உம்மை வெளிப்படுத்தி, நேரம் சமீபமாயிருக்கிறது என்பதை இன்று இரவு இந்த மக்கள் கூட்டத்திற்கு நீர் காண்பிக்கும்படி, நான் என்னை உமக்கு முன்பாகத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கிறேன். இரகசிய வருகைக்காக ஆயத்தப் படுத்த பூமியின் நான்கு திசைகளிலு



அவர் சொன்னதுபோல, பிதாவின் வாக்குத் தத்தத்திற்கான நேரம் வந்தது, “கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.” அந்த நேரமும் வந்தது.

27 வேதாகமம் சொல்கிறது, “பெந்தெ கொஸ்தே என்னும் நாள் முழுமையாக வந்த போது, பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து ஒரு முழக்கமுண்டாகி. அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அக்கினிமயமான பிரிந்த நாக்குகள் அவர்கள்மேல் வந்து அமர்ந்தது. அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டு, ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே மற்ற பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.” அவர்கள் வீதிகளுக்கு வெளியே சென்றார்கள். பேதுரு எழுந்து நின்று, அவர்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். தேவன் அப்படிச் சொல்லியிருந்ததால், அந்த நேரம் வந்திருந்தது.

அந்தச் சிறிய திருச்சபையிலிருந்து அடையா ளங்களும் ஆச்சரியங்களும் எல்லாமும் புறப் பட்டன. தன் பெயரைக் கூட கையெழுத்திடத்

தெரியாத மீனவரான பேதுரு என்ற மனிதனின் நிழலில் அவர்கள் மக்களைக் கிடத்தினார்கள். வேதாகமம் சொல்கிறது, “அவர் படிப்பறி யாதவரும் பேதமையுள்ளவருமாய் இருந்தார்.” ஆனால் அவர் இயேசுவுடனே கூட இருந்தவர் என்று அவர்கள் அறிந்து, கவனித்தார்கள். அவர்கள் மக்களை அவர் நிழலில் கிடத்தினார்கள், அவர்கள் குணமாக்கப் பட்டார்கள், ஏனென்றால் இந்தக் காரியங்கள் நடைபெறும் என்று தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாகத் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்.

28 அது கீழ்த்திசை தேசத்தில் விடியற் காலமாய் இருந்தது. இப்போது, அவர் சொன்னார், தீர்க்கதரிசி சொன்னார், “அது பகலுமல்ல இரவுமல்லாத ஒரு நாள் வரும்.” அது மந்தமான, பனிமூட்டமான வானிலை யாகவே இருக்கும். சூரியன் மறைந்தது. ஆனால் மேகங்கள் வழியாகவும் சூரியன் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது, அது மேக மூட்டமாக இருந்தால், நாம் இன்னும் சூரிய ஒளியில்தான் நடக்கிறோம், ஆனால் ஒளியின் முழுமையான பிரகாசத்தில் அல்ல.



மேலும், "பிதா எனக்குக் காண்பிக்கும் வரை நான் ஒன்றும் செய்வதில்லை" என்று கூறினார்.

தேவனிடமிருந்து வந்த அவருடைய தரிசனங்கள்தான் அதனைச் செய்தன. காண்கிறீர்களா, மாம்சம் மேன்மை பாராட்ட முடியாது; அது இயற்கைக்கு அப்பாற்பட்டது.

மேலும் நாத்தான்வேல் வந்தபோது, மிகவும் உறுதியான ஒரு மனிதர், இயேசு அவரை ஒரு உறுதியான கிறிஸ்தவர் அல்லது விசுவாசி என்று கண்டுகொண்டார். அவர், "இதோ, கபடற்ற ஒரு இஸ்ரவேலன்" என்று கூறினார்.

அவர், "ரபீ, என்னை உமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

அவர், "பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்பே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது நான் உன்னைக் கண்டேன்" என்றார்.

அவர், "நீர் தேவனுடைய குமாரன்" என்று கூறினார்.

அது தேவ குமாரனின் அடையாளம் என்று அவர் உணர்ந்துகொண்டார். அதைத்தான் அவர்

எங்களுக்கு அறிவிப்பார். ஆனால் நீர் யார்?" என்று கூறினாள்.

அவர், "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று கூறினார்.

52 அதுவே மேசியாவின் அடையாளமாக இருந்தது. அது அந்த நாளில் மேசியாவின் அடையாளமாக இருந்ததென்றால், மேலும் அவர் இன்றும் நேற்றும் என்றென்றைக்கும் மாறாதவராக இருந்தாரானால், அதுவே இன்றும் மேசியாவின் அடையாளமாக இருக்க வேண்டும்.

நாத்தான்வேல், மிகவும் உறுதியான ஒரு மனிதர்...?.. அந்த ஸ்திரீ ஒரு சமாரிய ஸ்திரீ என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் ஒரு எபிரெயனைப் பற்றி என்ன? போதகரான நிக்கொதேமுவைப் பற்றி என்ன? அவர், "நீர் தேவனிடத்திலிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசி அல்லது ஒரு போதகர் என்று நாங்கள் அறிவோம், ஏனெனில் தேவன் ஒருவனுடனே கூட இராவிட்டால் நீர் செய்கிறவைகளை ஒருவனும் செய்யமாட்டான்" என்று கூறினார்.



பின்னர் நாம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் அத்தகைய நிலையில் கடந்து வந்திருக்கிறோம், அங்கு நாம் சிறந்த திருச்சபை களையும், ஸ்தாபனங்களையும் கொண்டி ருந்தோம். மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிடேரியன், லூத்தரன், பெந்தெகொஸ்தே போன்ற பலவிதமான திருச்சபைகள் இந்தக் காலக்கட்டத்தில் உருவாகியுள்ளன. இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப் பதற்குப் போதுமான விசுவாசமும், அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை வேதாகமத்தைப் பார்த்து அறிந்துகொள்வதற்குப் போதுமான வெளிச்சமும் அவர்களுக்கு இருந்தது.

29 ஆனால் என்ன நடந்தது? மக்கள், “அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன” என்று சொன்னார்கள். ஏன்? அவர்கள் அதன்மேல் வெளிச்சம் கொண்டிருக்கவில்லை. அவர்களால் அதைப் பார்க்க முடியவில்லை, ஏனென்றால் அவர்களால் பார்க்க முடியாது என்று தேவன் சொல்லியிருந்தார். எனவே அவர்களால் அதைப் பார்க்க முடியவில்லை.

ஆனால் தீர்க்கதரிசி, சாயங்காலத்திலே சூரியன் பிரகாசிக்கும் என்றார்: "சாயங் காலத்திலே வெளிச்சமுண்டாகும்."

30 இப்போது, இங்கு அமெரிக்காவில், மேற்கு திசையின் எல்லை நாடான, மேற்கத்திய நாகரிகங்களில் மிகப் பெரியதான இங்கு, ஆதித்திலே இருந்ததுபோலவே ஒரு பழைய முறையிலான பரிசுத்த ஆவியின் எழுப்புதல் இப்போது வெளிப்படுகிறது என்று நான் முழு இருதயத்தோடும் நம்புகிறேன், அதே வகையான ஊழியம், அதே அடையாளங்கள் மற்றும் ஆச்சரியங்கள், அதே தெய்வீக சுகமளித்தல், ஆதித்திலே இருந்ததுபோலவே மக்கள் மீதான அதே தாக்கம் வெளிப்படுகிறது. ஏனென்றால் கிழக்கில் உதித்த அதே சூரியன்தான் மேற்கில் மறைகிறது, இந்தக் காரியங்கள் நிறைவேறுவதற்கான நேரம் வந்துவிட்டது.

இன்று காரியங்கள் இப்படி நடந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்ப்பதற்கான சரியான காரணம் அதுதான் என்று நான் நம்புகிறேன். இது ஒரு காலத்தில் நடந்திருக்கிறது. பாருங்கள், வரலாற்றில்



நான் உனக்குத் தண்ணீரைக் கொண்டுவருவேன்" என்று கூறினார். அதற்கு அவள் சொன்னாள்... உரையாடல் தொடர்ந்தது. சற்று நேரம் கழித்து அவளுடைய பிரச்சனை எங்கே இருக்கிறது என்பதை அவர் கண்டுபிடித்தபோது, "போய், உன் புருஷனை அழைத்துக்கொண்டு வா" என்றார்.

"எனக்குப் புருஷன் இல்லை" என்று அவள் கூறினாள்.

"அது சரிதான். உனக்கு ஐந்து பேர் இருந்தார்கள்" என்றார்.

அவள், "ஐயா, நீர் ஒரு தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்றாள். (இப்போது, இது புதியவர்களுக்கானது.) "ஐயா, நீர் ஒரு தீர்க்கதரிசி என்று காண்கிறேன். மேசியா வரும்போது..." (இயேசுவே மேசியா என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆம், நிச்சயமாக, தேவனுடைய குமாரன்.) "மேசியா வரும்போது, அவர் இதைச் செய்வார் என்று நாங்கள் அறிவோம். அவர் இந்தக் காரியங்களை

அவர்... மக்கள் கூட்டத்தில் நின்றுகொண்டிருக்க முடியும், மேலும் அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட அந்த ஸ்திரீயைப் போல, அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் பேச முடிந்தது. மேலும் அவர் மக்களின் இருதயங்களை அறிந்திருந்தார், அது சரிதானே? தேவன் அதனை வெளிப்படுத்தியபடியே அவர் மக்களின் இருதயங்களை அறிந்திருந்தார்; தேவன் அவருக்குக் காண்பித்தபடியே, அவர் அதனை அறிந்திருந்தார்.

மேலும் அவர் ஒரு ஸ்திரீயினிடத்தில் சென்றார்... ஒருமுறை அந்த ஸ்திரீ அவருக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதற்காக அவரிடம் வந்தாள், அல்லது யோவான் 4-வது அதிகாரத்தின்படி, அவர் அவளிடம் குடிக்கக் கேட்டார். அவர் குடிக்கக் கேட்டபோது, ஏன், இனத்தின் நிலைமை மோசமாக இருக்கிறது என்றும், சமாரியர்களிடம் கேட்பது யூதர்களுக்கு வழக்கமல்ல என்றும் அவள் அவரிடம் கூறினாள். அதற்கு அவர், "ஆனால் நீ யாருடன் பேசிக்கொண்டிருக்கிறாய் என்பதை நீ அறிந்திருந்தால், நீ என்னிடம் குடிக்கக் கேட்பாய். நீ இங்கே மொள்ள வராதபடிக்கு



எப்போதாவது, வரலாற்று ஆசிரியர்களாகிய நீங்கள் சொல்லுங்கள், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு உலகளாவிய ஒரு எழுப்புதல், தெய்வீக சுகமளித்தலின் அதிசயமும், பரிசுத்த ஆவியின் வல்லமைகளும், ஆவியின் வரங்களும் எப்போதாவது தொடங்கியதுண்டா? அது எப்போது நடந்தது?

31 ஓ, அவர்கள் ஒவ்வொரு முறையும் ஒரு சிறிய இடத்தில் ஒரு எழுப்புதலைக் கொண்டிருந்தபோது, ஒரு சிறிய கூட்ட மக்கள் மத்தியில் மட்டும் சுகமளித்தல்கள் அல்லது அது போன்ற ஏதாவது நடைபெறும். மெத்தடிஸ்டுகள் ஒரு எழுப்புதலைக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு தெய்வீக சுகமளித்தல் இருந்தது. பாப்டிஸ்டுகளுக்குச் சில தெய்வீக சுகமளித்தல் வழக்கமாக இருந்தது, மற்ற பலருக்கும் சில அடையாளங்கள் இருந்தன என்பதை நாம் காண்கிறோம்.

ஆனால் நீங்கள் கவனித்துப் பார்த்தால், நண்பர்களே, இந்த மாபெரும் உலகளாவிய எழுப்புதல், உலகின் ஒவ்வொரு தேசத்தின் ஒவ்வொரு மலையிலும் அக்கினி எரிகிறது. அது

சரிதான். கொரியாவில் பெரும் அடையாளங்களும் ஆச்சரியங்களும், இந்தக் கொரியப் போருக்குப் பிறகு அவர்கள் போராடிக் கொண்டும், பிழைப்பு நடத்தக் கடினமான நேரத்தைக் கொண்டிருந்தபோதும், தேவன் அங்கே சில சிறிய மக்களை எழுப்பினார், தேவன் தீர்க்கதரிசிகளையும், அடையாளங்களையும் ஆச்சரியங்களையும் எழுப்பினார், கொரியா முழுவதும் வீசிய ஒரு எழுப்புதலை, வேதாகமத்தைக் கூட அறிந்திராத ஆண்களும் பெண்களும் அடங்கிய ஒரு பழைய முறையிலான, அப்போஸ்தல எழுப்புதலை எழுப்பினார்.

“தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோற்றுவிக்க வல்லவராயிருக்கிறார்” என்று யோவான் சொன்னார்.

32 நாம் முடிவுக் காலத்தில் இருக்கிறோம். அங்கேதான் நாம் இன்று நிற்கிறோம், ஒரு உலகளாவிய எழுப்புதலில். இது கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கான அடையாளமாகும். அவர் வருவார், நற்செய்தி ஒவ்வொரு



தேர்ந்தெடுத்து, அவனைக் குணமாக்கிவிட்டுச் சென்றார்.

மேலும் 19-வது வசனத்தில் யூதர்கள் அவரைக் கேள்வி கேட்டார்கள். அவர் என்ன சொன்னார் என்று கவனியுங்கள். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதா செய்கிறதை குமாரன் காணுகிறாரேயல்லாமல், தானாய் ஒன்றும் செய்யமாட்டார்: அவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்."

முதலில் பிதா ஒரு தரிசனத்தின் மூலம் தமக்குக் காண்பிக்கும் வரை, வியாதிப்பட்டவர்களைக் குணமாக்கும் வகையிலோ அல்லது வேறு எதிலுமோ தாம் எதையும் செய்ததாக அவர் ஒருபோதும் உரிமை கோரவில்லை. அது வேதாகமம் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள், உங்கள் கரத்தை சற்று உயர்த்துவீர்களா? அது நன்று.

51 இப்போது, இயேசு ஆட்கொள்ளப்பட்டிருந்தார்—பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை தமக்குள் கொண்டிருந்தார், அதனால்

நமக்குக் கொடுத்திருக்கும் வழியில் பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதை ஒருபோதும் பார்த்திராத புதியவர்களான உங்களுக்கு ஒருவேளை... இப்போது, புதியவர்களான உங்களுக்கு நான் இதைச் சொல்லுகிறேன்: இயேசு ஒருபோதும் தன்னை குணமாக்குபவர் என்று உரிமை கோரவில்லை. "கிரியைகளைச் செய்கிறது நான் அல்ல; எனக்குள் வாசம் செய்யும் என் பிதாவே" என்று மட்டுமே அவர் கூறினார். அதனை நாம் அறிவோம், அல்லவா? மேலும் இயேசு முடவர்கள், குருடர்கள், சப்பாணிகள், மற்றும் நொண்டிகளான ஏராளமான மக்களைக் கடந்து சென்றதைக் குறித்துக் கேள்வி கேட்கப்பட்டபோது, அவர் யோவான் 5:19-ல் கூறினார், அவர்—அந்த—குளத்தின்—வாசல் வழியாகக் கடந்து சென்றபோது, மக்கள் அனைவரும் அங்கே படுத்திருந்தார்கள்... மேலும் அவர் பிதாவின் தரிசனத்தைக் கண்டிருந்தார், ஒரு மனுஷன் எங்கே படுத்திருக்கிறான் என்பதை அது அவருக்குச் சொல்லியிருந்தது. அவர் அவனைக் கண்டுபிடிக்கும் வரை மக்கள் மத்தியில் அவனைத் தேடிச் சென்று, அவனைத்



தேசத்திற்கும் பிரசங்கிக்கப்படும் வரை அவரால் வர முடியாது, மற்றும்—மற்றும் அவர்கள் குறைந்தபட்சம், ஒவ்வொரு தேசமும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், ஒவ்வொரு தேசமும் அதைக் கேட்டிருக்க வேண்டும். இந்த நற்செய்தி ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படும்போது, அப்பொழுது முடிவு வரும்.

இருண்ட காடுகளுக்குள், புறஜாதிகள் பலி செலுத்தும் நிலங்களின் இடங்களுக்குள் செல்வது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஒரு ஆட்டைக் கொன்று, இரத்தத்தை மக்கள் மேல் தெளிப்பது, மற்றும் சிலைகளுக்கு நீங்கள் கேள்விப்பட்டிருக்கும் அனைத்து காரியங்களையும் செய்வதுமான அந்த இடங்களில் மிஷனரிகளைக் காண்பது, பெந்தெகொஸ்தே அல்லாத (பெந்தெகொஸ்தேவும் உண்டு), ஆனால் பிரஸ்பிடேரியன், பாப்டிஸ்ட் மற்றும் கிறிஸ்தவ மிஷனரிகளைக் காண்பது ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, மக்கள் மத்தியில்

அடையாளங்களையும் ஆச்சரியங்களையும் செய்து கொண்டிருந்தார்கள்.

நான், “நீங்கள் ஒரு பெந்தெகொஸ்தேயா?” என்று கேட்டேன்.

"இல்லை சகோதரரே, நான் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவன்" என்றார்.

நான், “நீங்கள் கேம்ப்பலைட் சபையைச் (Campbellite church) சொல்கிறீர்களா?” என்றேன்.

"ஆம்," அவர் சொன்னார், "எங்கள் மக்கள்... அமெரிக்காவில் அவர்கள் இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் நாங்கள் தேவனைக் கண்டுகொண்டோம்."

33 அது என்ன? நேரம் வந்துவிட்டது. ஆமென். ஆம், தேவன் களத்தில் எழும்பி யிருக்கும் நேரம் வந்துவிட்டது. பழைய சடங்காச்சாரமான சபை காலங்கள் கடந்து விட்டன. தேவன் ஒரு புதிய காரியத்தைச் செய்யும் நேரம் இது, அவர் அதை இங்கு மட்டும் செய்யவில்லை, அவர் அதை உலகம் முழுவதும், எல்லா இடங்களிலும் வீசச்



இருந்திருந்தால், அவர் அப்போது—அல்லது இப்போது இங்கே இருந்திருந்தால், அவர் இங்கே மட்டும்தான் இருந்திருக்க முடியும். ஆனால் அவர் பரிசுத்த ஆவியானவரின் ரூபத்தில் இங்கே இருப்பதனால், அவர் உலகம் முழுவதும், எங்கும் பரவியிருக்கிறார். அவர் மூடுகிறார்... சரி, சமுத்திரத்தை ஜலம் மூடியிருப்பது போல, அவர் எங்கும் இருக்கிறார். மேலும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார்; அதை நாம் அறிவோம். மேலும் அவர் சர்வ வல்லமையுள்ளவருமாவார்.

இப்போது, அவர் இங்கே இருந்தால், மேலும் அவருடைய ஆவியானவர் இங்கே இருந்தால், அது அவர் இங்கே இருந்தபோது செய்ததைப் போலவே அவருடைய மக்களிலும் செயல்பட வேண்டும், இல்லையென்றால் அவர் ஏதோ தவறாகச் சொல்லியிருக்கிறார். அவர் இங்கே இருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

50 இப்போது, முன் கூட்டியே பார்ப்பதன் மூலமும், மேலும் காரியங்களைச் செய்வதன் மூலமும் நாம் செயல்படுவதற்காக அவர்

49 இப்போது, அவருடைய ஆசீர்வாதத்தைச் சுற்றியுள்ள ஐக்கியத்திற்காக நீங்கள் இன்னும் சற்று நேரம் இருக்க முடியும் என்று நான் ஜெபிக்கிறேன். இப்போது, அவரை விசுவாசித்து, அவரை அறிந்து, வேதாகமத்தை வாசித்திருக்கிற நீங்கள், நான்... எனது வாதம் இதுதான், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார். இப்போது எத்தனை கிறிஸ்தவர்கள் அதைத் தங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்கள்? உங்கள் கரங்கள் உயர்வதைப் பார்ப்போம். ஓ, அது அற்புதமானது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார்.

இப்போது, அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தால், "நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர்கள். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், இவைகளை விடப் பெரியவைகளையும் நீங்கள் செய்வீர்கள்" என்று அவர் கூறினார். பாவத்திற்காக தமது சொந்த இரத்தத்தையே ஒரு பலியாகச் செலுத்த வந்தபோது இருந்ததைப் போல, கிறிஸ்து இன்று இரவு சரீரப் பிரகாரமாக இங்கே



செய்திருக்கிறார். மேலே ஐஸ்லாந்து வரை, எஸ்கிமோக்களுக்குள்ளும், இந்திய பழங்குடியினருக்குள்ளும், கீழே தென்னிந்தியாவிலும், டெல்லியிலும், அந்தப் பகுதிகளிலும், கீழ்ப் பகுதிகளிலும் நாம் அடையாளங்களையும் ஆச்சரியங்களையும் காண்கிறோம். இந்தக் காடுகளில் பாதி பட்டினியோடு வேலை செய்து, பிரசங்கித்து, ஜெபித்துக் கொண்டிருக்கும் ஊழியக்காரர்கள்...

கொஞ்ச காலத்திற்கு முன்பு நான் ஒரு புகழ்பெற்ற மனிதரிடம் பேசினேன். அவர், “கம்யூனிஸ்ட் எல்லையில் உங்களுக்கு ஒன்றைக் காட்ட விரும்புகிறேன்” என்றார். ஒரு சிறிய இடத்திற்குக் கீழே சென்று அங்கே அமர்ந்துகொண்டு அவர் சொன்னார், "அவர்கள் ஆராதிக்கும் இடத்தை நான் உங்களுக்குக் காட்டுகிறேன்." நான் உங்களுக்குச் சொல்கிறேன், அவர்கள் கீழே சென்ற இடம் ஒரு எலியின் பொந்தைப் போலத் தெரிந்தது. நாங்கள் அந்த இடத்திற்குச் சென்றபோது, அங்கே மக்கள் தங்கள் கைகளை உயர்த்தி ஜெபித்துக்கொண்டும், அலறிக்கொண்டும்,

சத்தமிட்டுக் கொண்டும் அந்த இடம் முழுவதுமாக இருந்தார்கள்...

நான் சொன்னேன், "ஆஹா, இவர்கள் அனைவரும் பெந்தெகொஸ்தே மக்களா?"

34 அவர் சொன்னார், "அவர்களிடையே ஒரு பெந்தெகொஸ்தே நபர் கூட இல்லை. அவர்கள் பிரஸ்பிடேரியன்கள், பாப்டிஸ்டுகள், மெத்த டிஸ்டுகள், லூத்தரன்கள் மற்றும் பசியாயிருக் கிறவர்கள். அவர்கள் தேவனின் தொடுதலைப் பெறும்வரை, அவர்கள் பசியடையும் வரை அவர்கள் அவ்வளவு கடினமாக வருத்தப்பட்டு, நெருக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் அவர்க ளுடைய இருதயங்களைப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நிரப்பியிருக்கிறார்."

பெந்தெகொஸ்தே மக்களே, நாம் ஸ்தாபனங்களை உருவாக்குகிறோம், நான் ஒரு பாப்டிஸ்டைச் சொல்வது போலவே, என்னையும் உங்களில் ஒருவராகவே அழைத்துக் கொள்கிறேன். நாம் நம்மையே ஸ்தாபனமாக்கித் தனிமைப்படுத்திக் கொண்டோம், ஆனால் தேவன் அந்தத் தடைகளைத் தகர்த்தெறியும்



இப்போது, நண்பர்களே, நாம் வியாதிப் பட்டவர்களுக்காக ஜெபிக்கப் போகிறோம். நாம் அதிக நேரம் எடுத்துக் கொள்ள மாட்டோம், இன்னும் சில நிமிடங்கள்தான். இப்போது, சகோதரர் உட், அவர் எங்கே இருக்கிறார்? இன்று அவர் என்ன எண்களைக் கொடுத்தார் என்று கூட எனக்குத் தெரியாது...?.. T? T-1 முதல் 100 வரை? சரி, சகோதரனே.

சரி. இப்போது, இதில்... இதற்கு முன்பு நமது ஆராதனைகள் ஒன்றில்கூட கலந்து கொள்ளாத புதியவர்கள் யாராவது இங்கே இருக்கிறீர்களா, உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா? ஓ, ஆச்சரியம். சற்றுப் பாருங்கள். உங்களுக்காக நான் மிகவும் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். மேலே மாடத்தில், அங்கே யாராவது இருக்கிறீர்களா, முதல் முறையாக—முதல் முறையாக? மிகவும் நன்றி. இன்று இரவு நீங்கள் எங்களோடு இருப்பதிலும், அவருடைய வார்த்தையைச் சுற்றி எங்களோடு ஐக்கியம் கொண்டிருப்பதிலும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

எனக்கு எவ்வளவு சந்தோஷத்தை அளிக்கிறது. "பிதா எனக்குக் கொடுத்த யாவும் என்னிடத்தில் வரும், அவர்களில் ஒருவரும் கெட்டுப் போவதில்லை." இதுவே அந்த இரவாக இருந்தது; இதுவே அந்த நேரமாக இருந்தது. ஆகவே பிதாவே, நீர் இப்போது அவர்களை உமது அன்பான கரங்களில் ஏந்தி, அவர்களின் ஆத்துமாவிற்கு சமாதானத்தைக் கூற வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். மேலும் குணமாக்கும் ஆராதனை முடிந்தவுடனேயே, அவர்கள் இங்கே முன்னால் வந்து, பலிபீடத்தைச் சுற்றி கூடி, உமக்குத் துதியைச் செலுத்துவார்களாக. ஏனெனில் நாங்கள் இதனைக் கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

48 நீங்கள் இப்போது நன்றாக உணருகிறீர்கள் அல்லவா? உண்மையாகவே இருங்கள்; இப்போது நீங்கள் உண்மையிலேயே நன்றாக உணருகிறீர்கள், அல்லவா? பரிசுத்த ஆவியானவர் சந்தேகங்கள் அனைத்தையும் மற்றும் இருதயத்தின் கசடுகளையும் சுத்திகரித்து, நம்மை...?.. ஆக்குகிறார் என்று தோன்றுகிறது.



நேரம் வந்துவிட்டது. நீங்கள்—நாங்கள் ஊழியக்காரர்களாகிய நாம் அதை அவரிடம் கொண்டு செல்லாவிட்டால், அவர் தாமே அதைச் செய்வார்.

நேரம் வந்துவிட்டது. அது இப்போது சமீபமாய் இருக்கிறது. யெகோவா தேவன் களத்தில் எழும்பித் தம்மை வெளிப்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. அவர் எப்பொழுதும் காலங்களின் சந்திப்பில்தான் அப்படிச் செய்வார். அந்த நேரம் இப்போது வந்துவிட்டது. வெளிச்சம் பிரகாசிக்கிறது.

35 நான் இப்போது பிரசங்கத்தை நிறுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது. நான் நோயாளிகளுக்காக ஜெபிப்பதற்கான நேரம் வந்துவிட்டது. தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது. இயேசு சொன்னார், “நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், நான் செய்கிறவைகளை நீங்களும் செய்வீர்கள், இவைகளைவிடப் பெரிதானவைகளையும் செய்வீர்கள்.” இந்த வார்த்தை சத்தியம் என்பதை தேவன் நிரூபிப்பதற்கான நேரம் வந்துவிட்டது. இது

வெறும் ஒரு கட்டுக்கதை அல்ல, அவர்கள் மனோதத்துவத்தை உருவாக்கும் புத்தரைப் போலல்ல... புத்தர்கள், மௌ மௌஸ் (Mau Maus) மற்றும் ஒவ்வொரு வகையான மற்றவையும், அவற்றோடு ஒரு மனோதத்துவத்தைக் கொண்டுள்ளன. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தாமே மக்கள் மத்தியில் கிரியை செய்வதைத் தவிர, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் அடையாளங்களையும் ஆச்சரியங்களையும் உருவாக்கக்கூடிய வேறொரு மதம் வானத்தின்கீழ் இல்லை.

36 இங்கே உள்ள நம்முடைய ஸ்தாபனங்கள்... அந்த நாளில், பில்லி கிரகாமுடனும் அவர்களுடனும் சாய்ப்பானில் (Saipan) இருந்த ஒரு சகோதரியிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை நான் வாசித்தேன், அவர் சகோதரர் மூரின் மகள். அவர்கள் நேர்காணல் அளித்திருந்த செய்தித்தாளில் அவர்களது புகைப்படம் ஒன்றாக இருந்தது. உடனே... திருமதி மூர் சொன்னார், அல்லது இப்போது திருமதி பிரைஸ், அவர்கள் அங்கே சென்றபோது, இங்கே அவர்கள் ஒரு மிஷனரி



அதைச் செய்தீர். இப்போது, பிதாவே, உமது வார்த்தையின் அடிப்படையில், அவர்களின் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப் பட்டுவிட்டன என்று நான் கூறுகிறேன். உமது வார்த்தை அவ்வாறு கூறுவதனால், அவர்கள் உமது பிள்ளைகள். மேலும் அது...

47 இனிவரப்போகும் மில்லியன் கணக்கான ஆண்டுகளில், அணு ஆயுதக் காலம் இப்போது நெருங்கியிருக்கும் நிலையில், கோபால்ட் வெடிகுண்டு உருவாக்கப்பட்டு முழு உலகமும் இருபத்தி நான்கு மணி நேரத்திலோ அல்லது அதற்கும் குறைவான நேரத்திலோ அழிக்கப் படலாம்... பிதாவே, ஒருநாள் இந்த பழைய உலகம் ஆட்டம் காணும்; எங்கள் எலும்புகள் மணலில் வெளுத்துப்போகும், மேலும் கல்லறைக் கற்கள் கவிழ்க்கப்படும், ஆனால் நாங்கள் அக்கரையிலே பத்திரமாக உம்மோடு இருப்போம்.

ஆண்டவரே, நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீர் தந்திருக்கும் இந்தப் பிள்ளைகள் உம்மிடம் வருவார்கள் என்பதை அறிவது, அதை மட்டும் அறிந்துகொள்வது

ஆண்டுகள் எடுத்தன. உமது வார்த்தை எவ்வளவு பெரியது.

ஆண்டவரே, இதோ உமது வார்த்தை இருக்கிறது. "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு, அல்லது நியாயத்தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்று உமது வார்த்தையில் நீர் கூறினீர். இயேசுவே, நீரே இதனைக் கூறினீர்.

மேலும் பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று என்று நீர் கூறினீர். மேலும் நான்—நான் வார்த்தையைப் பிரசங்கித்தேன். மேலும் இந்த மக்கள் தாங்கள் விசுவாசிப்பதாகவும் ஏற்றுக் கொள்வதாகவும் தங்கள் கரங்களை உயர்த்தியிருக்கிறார்கள்.

"என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால், ஒருவனும் என்னிடத்தில் வரமாட்டான்" என்று நீர் கூறினீர். அப்போது நீர்



இடத்தைக் கொண்டிருந்தார்கள், அவர்கள் பேசத் தொடங்கினார்கள் என்று சொன்னார். அங்கே சகோதரர் ஆஸ்போர்ன் இருந்தார், அவர் சொன்னார், "இப்போது, நான் அவர்களுடன் சற்று பேசினேன்," மேலும் அவர் சொன்னார், "சகோதரர் பிரான்ஹாம் இருந்தார்... நான் ஒரு கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தபோது, அன்று இரவு கர்த்தருடைய தூதன் அங்கே ஒன்றைச் செய்வதை நான் கண்டேன், கிறிஸ்தவ சபையான ஒரு புகழ்பெற்ற சபையிலிருந்து சில மக்கள், திருமதி மூரிடம் சென்று, 'சகோதரர் பிரான்ஹாமை சாய்ப்பானுக்குத் திரும்பக் கொண்டுவருவதற்காக அவரைத் தேடி நாங்கள் இப்போது அமெரிக்காவிற்குச் சென்று கொண்டிருக்கிறோம்' என்றார்கள்."

அவர்கள் சொன்னார்கள், “எங்கள் சபை... நிச்சயமாக, நாங்கள் அவர்களுக்கு எழுதி, இங்கே என்ன புறப்பட்டு வந்துள்ளது என்பதை அவர்களுக்குத் தெரிவித்தோம்.” "நாங்கள் உண்மையான ஒரு எழுப்புதலைக் கொண்டிருக்கிறோம்" என்றார்கள். "நாங்கள் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறோம், அடையாளங்கள் மற்றும் ஆச்சரியங்கள் நடைபெறுகின்றன,"

என்று சொன்னார்கள், "பரிசுத்த ஆவியானவர் எங்கள் மக்கள் மீது இறங்குகிறார். அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள், இந்த இடம் முழுவதும் பெரும் அடையா ளங்களையும் ஆச்சரியங்களையும் காட்டு கிறார்கள்" என்றார்கள். மேலும், "நாங்கள் ஒரு உண்மையான எழுப்புதலைக் கொண்டிருக் கிறோம்" என்றார்கள்.

37 தேவன் ஸ்தாபனத்தின் எல்லைகளை உடைத்து, மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிடேரியன், லூத்தரன் மற்றும் தாழ்மை யான, நொறுங்குண்ட இருதயத்தைக் கொண்டி ருக்கும் அனைவர் மீதும் தமது பரிசுத்த ஆவியை ஊற்றியிருக்கும் நேரம் வந்துவிட்டது.

பிரிக்கும் நேரம் வந்துவிட்டது. ஒரு தூக்குநூல் இருக்கிறது. தேவன்... நீங்கள் அந்த எல்லையின் ஒரு பக்கத்தையோ அல்லது மறுபக்கத்தையோ சந்திப்பீர்கள். நண்பர்களே, இன்றிரவு நீங்கள் அந்த எல்லையின் ஒரு பக்கத்தில் இருக்கிறீர்கள். வியாதியஸ்தர்களாகிய நீங்கள், இன்றிரவு உங்களில் பலர் சுகம்பெறுவதற்காக இங்கு வந்திருக்கும் நேரம்



வாத்தியக் குழுவினர் இருக்கும் குழியில், "தேவனே, என்மேல் இரக்கமாயிரும். நான் உம்மை அறியேன்" என்று சொல்லக்கூடிய யாராவது இருக்கிறீர்களா. அப்படி இருந்தால், உங்கள் கரத்தை உயர்த்துங்கள். தேவன் இரக்கமாயிருப்பாராக.

46 சரி. இப்போது இவர்களுக்காக நாம் ஜெபிக்கப் போகிறோம். பரலோகப் பிதாவே, இவர்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பிதாவே, உமது குமாரனாகிய இயேசுவின் நாமத்திலே நாங்கள் எதைக் கேட்டாலும், அவர் அதைச் செய்வார் என்று நீர் எங்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளீர். ஆண்டவரே, உமது வார்த்தையையே நான் மேற்கோள் காட்டுகிறேன். மேலும் உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே நீர் உமது வார்த்தையைப் பேசினீர் என்றால், நீர் அதனைப் பேசின அதே கணத்திலேயே, உமது குமாரன் அடிக்கப்பட்டார். உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் அவரே, ஆனாலும் அது நிஜமாவதற்கு ஆயிரக்கணக்கான

அதிலிருந்து குற்றமற்றவனாக இருக்க விரும்புகிறேன்.

நீங்கள் என் சகோதரனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், நீங்கள் என் சகோதரியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உங்களைக் காயப்படுத்துவதற்கான எதையும் நான் உங்களுக்கு வழங்கவில்லை. நான் உங்களுக்கு ஒன்றைச் கொடுக்கிறேன், உங்களுக்குச் சமாதானத்தையும், ஜீவனையும் அளித்து, உங்களுக்கு உணவளித்து, உங்களை இந்த பூமியில் பாதுகாத்து, உங்களுக்காக இந்த நன்மையான காரியங்கள் அனைத்தையும் செய்து, உங்களுக்காக இன்னும் பெரிய காரியங்களைச் செய்ய வாஞ்சிக்கிற கர்த்தராகிய இயேசுவையே உங்களுக்கு அளிக்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரனே. ஆம், அது நன்று; அது சரி. அங்கே பின்னால் இருக்கும் உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. அது நன்று. தேவனுக்கு என்றென்றைக்கும் துதி உண்டாவதாக. கீழே இங்கே உள்ள குழியில்,



வந்துவிட்டது; உங்கள் சுகமளித்தலுக்கான நேரம் வந்துவிட்டது. உங்களுக்காக தெய்வீக சுகமளித்தலை நோக்கி எதையும் செய்யக்கூடிய அளவுக்கு இந்த உலகில் போதுமான மனிதர்கள் ஒன்றுகூடி வர முடியாது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரே ஒரு சுகமளித்தல்தான் இருக்கிறது, அது தெய்வீக சுகமளித்தல் மட்டுமே, வேறு எந்த சுகமளித்தலும் இல்லை.

மருத்துவர்கள் குணமாக்குவதில்லை; தாங்கள் குணமாக்குவதாக அவர்கள் உரிமை கோருவதுமில்லை. அவர்கள் எலும்புகளைச் சரிசெய்கிறார்கள், காயங்களைத் தைக்கிறார்கள், ஆனால் அவர்கள் கால்சியத்தை வைத்து எலும்பை ஒன்றாக இணைப்பதில்லை, மேலும் அவர்கள் திசுக்களை உருவாக்குவதில்லை மற்றும்—மற்றும் குணமாக்குவதில்லை—வெட்டுப் பட்ட கையை குணமாக்குவதில்லை, அல்லது எதுவாக இருந்தாலும் சரி. தேவன் அதைக் குணமாக்கும்போது, அவர்கள் அதைத் தைத்து, சுத்தமாக வைத்திருக்கிறார்கள் அவ்வளவுதான். அது சரிதான். உங்கள் கைகளைக் கழுவுவதற்கு சோப்பு தயாரிக்கும்

மனிதனைப் போலவே, அவ்வாறு செய்வதற்கு அவர்களும் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள், அதே காரியம்தான்.

38 இப்போது, உங்களுக்குப் போக்குவரத்து வசதியை வழங்குவதற்காக ஒரு வாகனத்தை அல்லது விமானத்தை உருவாக்கும் மனிதன், அது தேவனுடைய நன்மையே. ஆனால் தேவனே ஒவ்வொரு நன்மையான காரியத்தையும் தருபவராக இருக்கிறார், சர்வவல்லமையுள்ள தேவன் மூலமாக மட்டுமே சுகமளித்தல் வர முடியும். ஆம், ஐயா.

நான் என் கையை உடைத்துக்கொண்டால், நான் அவரிடம் நீட்டி, “டாக்டர், என் கையை உடனே குணமாக்குங்கள். நான் என் செய்தியைத் தொடர்ந்து பிரசங்கிக்க வேண்டும்” என்று நான் சொல்லும்படியான அந்த மனிதனை நான் பார்க்க விரும்புகிறேன். ஏன், நான் ஒரு பைத்தியம் என்று அவர் நினைப்பார். நிச்சயமாக. அவரால் அதைச் செய்ய முடியாது. அவர் சொல்வார், "நான் உங்கள் கையைச் சரிசெய்கிறேன்."



உயர்த்துவீர்களா? இப்போது இன்னும் சற்று நேரம் காத்திருக்கிறேன். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன், ஆனால் நாம்...?.. ஆத்துமாக்கள். சிந்தித்துப் பாருங்கள், இன்னும் ஒரே ஒரு ஆத்துமா, அதற்கு என்ன அர்த்தம்?

நான் வரிசையாகக் கீழே இறங்கிய பிறகு தேவனுடைய தூதர்கள் ஒரு தரிசனத்தில் என்னைச் சந்தித்து, "நீ ஏன் அந்தப் பலிபீடத்தை இன்னும் சற்று நேரம் வைத்திருக்கவில்லை? நான் ஒரு இருதயத்திடம் பேசிக் கொண்டிருந்தேன், ஆனால் நீ மிக விரைவாக முடித்துவிட்டாய்" என்று கேட்டால் என்ன ஆவது? காண்கிறீர்களா? ஆச்சரியம், நான் என்ன சொல்வேன்? அன்றைய தினம் அந்த எலும்புத் தோலுமான கரங்கள் என்னை நோக்கி நீண்டு, "ஓ, போதகரே, நான் என் கரத்தை உயர்த்த ஆயத்தமாகத்தான் இருந்தேன், ஆனால்—ஆனால், சரி..." என்று சொன்னால் என்ன ஆவது? காண்கிறீர்களா, நான் நிச்சயமாக இருக்க விரும்புகிறேன். அப்படி நடந்தால் அந்த இரத்தம் என் கைகளில் கேட்கப்படும். நான்

அவர் என் இருதயத்தைத் தட்டினார், நான் அதனைத் தள்ளிப்போட்டேன். ஓ, அது என்னை வேட்டையாடுகிறது.

அந்தக் காலத்தில் மரித்துப்போன அநேக மக்களில், ஒருவேளை சில ஆத்துமாக்களை நான் கிறிஸ்துவிடம் கொண்டு வந்திருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். நான் ஒருபோதும், என்றென்றைக்கும்... எத்தனை மில்லியன் ஆண்டுகள் கடந்தாலும், மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காது. இப்போது இருப்பதே அந்த வாய்ப்பு. அவருக்காக உங்கள் கரத்தை சற்று உயர்த்துவீர்களா?

45 இதுவரை தங்கள் கரத்தை உயர்த்தாத யாராவது இங்கே இருக்கிறீர்களா, கிறிஸ்து உங்களைத் தமது ஊழியனாக ஆக்க விரும்புகிறார் என்று இப்போது உணரு கிறீர்களா? அது எப்பேர்ப்பட்ட சிலாக்கியம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே. நான் உங்களைக் காண்கிறேன். நிச்சயமாக தேவன் அறிவார், உங்களைக் காண்கிறார். வேறு யாராவது, உங்கள் கரத்தை



"சரி, உங்களால் குணமாக்க முடியும் என்று நான் நினைத்தேன். உங்களால் என்னைக் குணமாக்க முடியுமானால், என்னைக் குணமாக்குங்கள். நான் குணமடைய விரும்புகிறேன்.'' அவரால் முடியாது.

அவரால் செய்யக்கூடிய ஒரே காரியம் இதுதான், "ஐயா, நான் உங்கள் கையைச் சரிசெய்து அதைச் சரியான இடத்தில் வைக்க முடியும். மீதமுள்ளவற்றை சர்வவல்லமையுள்ள தேவன்தான் செய்ய வேண்டும்" என்று சொல்வதுதான். அது சரிதான்.

அவர் குடல்வாலை அகற்றலாம் அல்லது ஒரு பல்லைப் பிடுங்கலாம், ஆனால் அது இருந்த இடத்தை அவரால் ஒருபோதும் குணமாக்க முடியாது. அது சரிதான். அதற்குத் தேவன் வேண்டும். தேவன் திசுக்களை உருவாக்குகிறார். தேவன் மட்டுமே குணமாக்குபவர்.

என் நண்பர்களே, நீங்கள் அந்த நேரம் வந்துவிட்டது... உங்களில் பலர் இந்த நகரத்திலுள்ள சிறந்த மருத்துவர்களிடம்

சென்றிருக்கிறீர்கள், சிகாகோ நகரம் அதன் சிறந்த மருத்துவர்களுக்குப் பெயர் பெற்றது. அவர்களுக்காகவும், ஒவ்வொரு கிளினிக்குக் காகவும், ஒவ்வொரு மருத்துவமனைக்காகவும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன், ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு சைரன் சத்தத்தைக் கேட்கும்போதும், ஒவ்வொரு முறையும் ஒரு கல்லறையைக் கடந்து செல்லும்போதும், ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு நரைமுடியைப் பார்க்கும்போதும், ஏதோ ஒரு நாள் நீங்கள் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தேவன் உங்களை எச்சரிக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் எப்போதும் தங்குவதற்காக இங்கு இல்லை. அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இல்லை யா? நிச்சயமாக.

39 இந்தக் காரியங்களை நாம் உணர்ந்துகொள்வதற்கான நேரம் இப்போது வந்துவிட்டது. தேவன் எல்லைகளைத் தகர்க்கும் நேரம் வந்துவிட்டது. பிசாசானவன் ஒரு காட்டு சிங்கத்தைப் போல எழும்பி, கெர்ச்சிக்கிறவனாய்



அழைப்பிற்கு நீங்கள் பதிலளித்துள்ளீர்கள் என்பதே அதன் அர்த்தமாகும் (அதுதான்), உங்கள் இருதயத்தைத் தட்டுகிறார்.

அங்கே மாடத்தில் சிலரைக் காண முடியுமா, நிச்சயமாக... அங்கே இருக்கும் இளைஞர்களாகிய உங்களுக்குள், இன்று இரவில் உங்கள் தீர்மானத்தை எடுப்பீர்களா?

நேற்று எனது பிறந்தநாளாக இருந்ததால், நான் இன்று சிந்தித்துக் கொண்டிருந்தேன், மேலும் நினைத்துப் பார்த்தேன்... ஏதோ காலமே ஆகாதது போலத் தோன்றுகிறது, நான் ஒரு சிறுவனாக இருந்தேன். ஆனால் இதோ எனக்கு ஏற்கெனவே நாற்பத்தேழு வயதாகிவிட்டது. இது எப்படி சாத்தியம்? மிகவும் வேகமாக கடந்து செல்கிறது. நான் திரும்பிப் பார்க்கிற ஒரே காரியம், நான் எனது இருபது வயதில்தான் ஒரு ஊழியக்காரனானேன். ஆனால் இப்போது, நான் எனது ஐந்து வயதிலேயே ஊழியக்காரனாகவில்லையே என்று வருந்துகிறேன். அந்த ஒரே ஒரு வருத்தம்தான் எனக்கு இருக்கிறது, நான்—நான் சீக்கிரமாகவே வார்த்தையைப் பிரசங்கிக்கவில்லையே என்று.

உங்கள் கரத்தைக் காண்கிறேன். ஓ, ஆச்சரியம், எங்கும் கரங்கள்...

ஓ, நான் விரும்புகிறேன்... உங்கள் கரங்களை உயர்த்துங்கள்; இது உங்கள் இருதயத்தில் இருந்தால் இப்போதே அதை உயர்த்துங்கள், அது உங்களுக்கு என்ன செய்கிறது என்பதைப் பாருங்கள். நீங்கள் அந்தக் கரத்தை உயர்த்திக் கீழே இறக்கும்போது, "இதைத்தான் நீ செய்திருக்க வேண்டும். இதைத்தான் நீ செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன்" என்று ஏதோ ஒன்று சொல்லவில்லையா என்று பாருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மா. இப்போது, அதைக் குறித்து நீங்கள் நன்றாக உணருகிறீர்கள், இல்லையா? நிச்சயமாக நீங்கள் உணருகிறீர்கள். நீங்கள் சரியான காரியத்தையே செய்திருக்கிறீர்கள்.

44 "அதற்கு என்ன அர்த்தம், சகோதரர் பிரன்ஹாம்?" என்று கூறுங்கள். ஒருவரும் கெட்டுப்போகாமல், அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி, உங்கள் இருதயத்தைத் தட்டும் தேவனுடைய



சுற்றித்திரிந்து, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் நேரம் வந்துவிட்டது. ஆனால் மாபெரும் யுத்தம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

இன்றிரவு, நாம் வானாதி வானங்களுக்கு மேலாக ஏறி, தேவனுக்கும் பிசாசுக்கும் இடையிலான ஒரு இறுதி மோதல் நடைபெறுவதற்காக, இப்போது ஒன்றுகூடி ஆயத்தமாகி, நிகழவிருக்கும் இந்த மாபெரும் நாடகத்தைப் பார்க்க முடிந்தால் அது எப்படி இருக்கும் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். நான் வெற்றியடையும் பக்கத்தில் இருப்பதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால், "ஆட்டுக்குட்டியானவர் அவர்களை ஜெயங்கொள்வார், அவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாய் இருக்கிறார்" என்று அது சொல்லியிருக்கிறது.

இன்றிரவு நீங்கள் எந்தப் பக்கத்தில் இருக்கப் போகிறீர்கள் என்று ஒரு முடிவெடுப் பதற்கான நேரம் இப்போது உங்களுக்காக

வந்திருக்கிறது. நீங்கள் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவீர்கள் என்ற முடிவை எடுப்பீர்கள் என்று நான் தேவனை நம்புகிறேன்.

40 நாம் ஜெபிப்போம். எங்கள் பரலோகப் பிதாவே, இன்றிரவு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம், ஏனென்றால் இதுதான் அந்த நேரம். இங்குள்ள பலருக்கு நாளை என்பது மிகவும் தாமதமாக இருக்கலாம். இங்கு வியாதியோடு அமர்ந்திருக்கும் சிலருக்கு இது மிகவும் தாமதமாக இருக்கலாம், அவர்கள் மரித்துப் போகலாம்; அவர்கள் உங்களை அறியாத பாவிகளாக இருக்கலாம். காலையில் இது மிகவும் தாமதமாகிவிடலாம். சற்று யோசித்துப் பாருங்கள், நித்தியம் உருண்டோடும் காலம் வரை அவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு ஒருபோதும் கிடைக்காது. நீங்கள் அவர்களின் இருதயத்திற்கு அழைப்பு விடுக்கும் கடைசி நேரமாக இது இருக்கலாம்.

ஓ தேவனே, கனிவான இரக்கத்தினால், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி... பரலோகப் பிதாவே, இப்போதே, நீங்கள்



சித்தமனைத்தையும் உமது சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறேன். மேலும் இந்த இரவு முதல், என் வாழ்நாளின் மீதி நாட்கள் முழுவதிலும் நான் உமக்கு ஊழியம் செய்வேன். என் கரத்தை உயர்த்தும்போது நான் இதனை வாக்குறுதியாக அளிக்கிறேன்" என்று சொல்வீர்களா.

தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, இளம் சகோதரியே. அது மிகச் சிறப்பு. வேறு யாராவது, உங்கள் கரத்தை உயர்த்துகிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது, இது... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, என் கறுப்பின சகோதரனே. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, அங்கே என் சகோதரனே. இங்கே தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால், ஆம், என் சகோதரனே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே. அங்கே பின்னால் நான் உங்களைக் காண்கிறேன், இங்கே கீழே, சகோதரியே,

வரையிலும் உண்மையுள்ளவர்களாய் இருந்து, இயேசுவையும் அவருடைய பெரிய மற்றும் வல்லமையான கிரியைகளையும் காணாமலேயே உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிற மக்களாகிய நீங்கள், சரியான தீர்மானத்தைத்தான் எடுத்துள்ளீர்கள் என்பதை அறியும் சிலாக்கியத்தை இப்போது பெற்றிருக்கிறீர்கள். அவர் இரண்டாவது முறை வரும்போது அதனை நீங்கள் இன்னும் எவ்வளவாய் அறிந்துகொள்வீர்கள்.

43 ஆனால் நீங்கள் சரியான தீர்மானத்தை எடுத்துள்ளீர்கள். மேலும் இன்று இரவு இங்கே வந்திருக்கும் ஆண்களே, பெண்களே, சிறுவர்களே, சிறுமிகளே, நீங்கள் யாராக இருந்தாலும், நீங்கள் இந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை என்றால், இப்போது கிறிஸ்துவுக்கு நேராக உங்கள் கரத்தை உயர்த்தி, "கிறிஸ்துவே, நான் என் கரங்களை உமக்கு நேராக உயர்த்துகிறேன், இதன் மூலமாக நான் உம்மை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். என் வாழ்வில் நான் தவறாக இருந்தேன் என்பதை நான் அறிவேன், ஆனால் இப்போது என்



இங்குள்ள இருதயங்களிடம் அவர்களின் நித்திய இலக்கைக் குறித்தும், அவர்கள் அதை எங்கே கழிக்கப் போகிறார்கள் என்பதைக் குறித்தும் பேச வேண்டும் என்று நான் உம்மிடம் ஜெபிக்கிறேன்.

ஓ, ஆண்டவரே, நீங்கள் தொடும் ஒவ்வொரு இருதயமும் தங்கள் கைகளை உயர்த்தி இப்போதே ஒரு முடிவெடுத்து, "இது எனக்கான நேரம். நான் இப்போது கர்த்தராகிய இயேசுவினிடத்திற்கு வருகிறேன்" என்று சொல்லும்படி நடப்பதாக.

41 நாம் நமது தலைகளைத் தாழ்த்தி யிருக்கும் வேளையில், ஆர்கன் வாசிப்பவர் நமக்கு ஒரு இசையை, ஆர்கனில் ஒரு நாதத்தை அளித்தால்... நீங்கள் இருக்கும் இடங்களில், உங்கள் இருக்கைகளில் நாம் அமர்ந்திருக் கும்போது, இந்த வேளையில் ஏதோ ஒன்று உங்கள் இருதயத்தைத் தொட்டிருப்பதாக நீங்கள் உணர்ந்தால், நீங்கள் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய நேரம் இது என்று உணர்ந்தால், "இந்த இரவு முதல், தேவனே, நான் என் கரத்தை உமக்கு நேராக உயர்த்துவேன். நான்

உமக்கு ஊழியம் செய்வேன்" என்று கூறுவீர்களா. தேவனுக்கு நேராக உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா, நீங்கள் உங்கள் கரத்தை உயர்த்தும்போது அவர் உங்கள் கரத்தைக் காணும்படி செய்வீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களையும், உங்களையும். ஆம், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, உங்களையும், எங்கும் உள்ள அனைவரையும். ஆம், இருபது அல்லது அதற்கும் மேற்பட்ட கரங்கள் உயருகின்றன.

சரி, மேலே மாடத்தில், அங்கே யாராவது ஒருவர், "இது எனது நேரம்" என்று சொல்லுங்கள். என் பிரியமான நண்பரே, இந்த பூமியில் நான் உங்களை இனி ஒருபோதும் சந்திக்காமல் போகலாம். நாம் ஒருவரையொருவர் சந்திப்பது இதுவே கடைசி முறையாக இருக்கலாம். ஆனால் நான் உங்களை அங்கே சந்திக்கும்போது, இன்று இரவு நான் பிரசங்கித்த செய்தியானது, நான் சத்தியத்தையே கூறினேன் என்பதற்கு சாட்சியாக இருக்கும். இப்போது இந்தக் கட்டடத்தில் இருக்கிற இயேசு கிறிஸ்து, நான் சத்தியத்தையே



கூறினேன் என்பதற்கு இன்னும் பத்து நிமிடங்களில் சாட்சி பகருவார். அதுவே சரி.

42 நமக்கு இல்லை... நாம்... ஒரு காரியம் நிச்சயம்: இயேசு மரிக்கவில்லை. புத்தர், அவர்களுடைய தேவன் ஏறக்குறைய இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரித்தார்; சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் மரித்தார். முகமது மரித்துவிட்டார்; முகமது மரித்து நடைமுறையில் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அவர் கல்லறையில் இருக்கிறார். வேறு ஒவ்வொரு தேவனும் அல்லது—அல்லது—அல்லது இந்த மதங்களின் நிறுவனரும் சென்றுவிட்டார்கள். ஆனால் மரித்தோரிலிருந்து எழுந்த ஒரே ஒருவர்தான் இருக்கிறார், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை நிரூபிக்கவும் முடியும்.

உண்மையை வெளிப்படுத்தும் நேரம் வந்துவிட்டது. தேவன் சரியானவரா அல்லது தேவன் தவறானவரா என்பதை அறியும் நேரம் வந்துவிட்டது. ஆகையால் தேவன் சரியானவர் என்பதை நாம் அறிவோம். எனவே, இது